அறைவு 02 இயம் 21 January 04 - 10 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு
MALAIMURASU

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

# கிழக்கின் உள்ளூராட்சி ஆணையாளர் நியமனத்திற்கு எதிர்ப்பு

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராகக் கடமையாற்றி வந்த உதயகுமார் மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளராக இடமாற்றப்பட்ட பின்னர் கிழக்கின் ஆளனரால் உள்ளூராட்சி ஆணையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளவரை மாற்றும்படி கோரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபையின் அங்கத்தவர்கள் ஆளுனருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாண்டில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக எம்.வை.சலீம் கிழக்கின் ஆளுனரால் நியமிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை அங்கத்தவர்கள் பதினொருவரால் கையொப்பம் இடப்பட்ட, எட்டம்சக் கோரிக்கைகளைக் கொண்ட கடிதம் ஒன்று ஆளுனருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பிரதம செயலாளருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது......

**நியமனம் இனச்சார்பு இன்மையைப் பாதிக்கும் த.தே.கூ**

13

## உணவு விடுதி உரிமையாளர் மீது கொலை வெறித்தாக்குதல்

ஜீனியல் உணவு விடுதி உரிமையாளர், மற்றுமோர் ஊழியர் மீது கடந்த 25ம் திகதி கொலை வெறித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளது. இத்......

13





## முல்லை இராணுவக் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் நியமனம்??



முல்லைத்தீவின் இரா ணுவக் கட்டளை அதிகரியாக மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு டெலிகிராப் இணைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அவ் இணையத்தளச் செய்தியின் படி.......

இனவழிப்புக் குற்றம் சாட்டப்பட்டுள்ள இலங்கை இராணுவத் தளபதிகளில் ஒருவரான ஜெனரல் டயஸ்

13

## கிழக்கில் உருவாக இருக்கும் "மஹிந்த ராஜபக்ஷ கல்லூரி"

கிழக்கு மாகாணத்தில் புதிய கல்லூரியொன்று உருவாக்கப்படவுள்ளது. இலங்கை சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயரைக் கொண்டமையவுள்ள இக் கல்லூரியானது சகல வசதிகளையும் கொண்ட கல்லூரியாக உருவாக்கப்படவுள்ளது.

ஏற்கனவே இலங்கையின் ஹோமாகம மற்றும் மாத்தற பிரதேசங்களில் இவ்வகையான கல்லூரிகள் இரண்டு உருவாக்கப்பட்டுள்ளன. அக் கல்லூரிகள் இரண்டிலும் இவ்வருடம் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற முறையே அறுநூற்று எண்பது மற்றும் இருநூற்றியென்பது



## உலக சாதனை



"35வது பந்தை எதிர்கொள்ளும் போது கூட உலக சாதனை என் எண்ணத்திலேயே இல்லை" என குறைந்த பந்துகளில் சதமடித்து உலக சாதனை நிலைநாட்டியுள்ள நியூசிலாந்தின் சகலதுறை......

13

## வட்டாரத் தேர்தல் முதன் முதலில் மட்டக்களப்பில்??




வட்டாரத் தேர்தல் முறை பற்றி நிர்ணயம் செய்யும் தேசிய எல்லை ஆணைக்குழுவின் பணிக்காலத்தை கடந்த 07ம் திகதி முதல் மேலும் மூன்று மாத காலத்திற்கு மந்திரி சபை நீடித்துள்ள நிலையில்.....

13

## பாரதிபுரம்- மேன்கமம் விதவைகள் சிரமதானம்



மூதூர் பாரதிபுரம் , மேன்கமம் கிராமங்களிலுள்ள விதவைகள் நலன்புரிச் சங்கங்கள் இரண்டும் அப் பகுதியில் சிரமதானத்தின் ஊடாக பல பகுதிகளைச் செம்மையாக்கி யுள்ளன. மேன்கமம் கிராமத்தில் உள்ள அபிவிருத்திச் சங்கங்கள்....

13

## குழந்தையைக் கடத்தினாரா இளம் தாய்???



சாம்பல்தீவு அன்னை சாரதா இல்லத்தின் பொறுப்பில் இருந்த குழந்தையொன்று காணாமற் போயுள்ளதாக தகவல் கிடை......

13



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

### நியமனங்களும் இன வேறுபாடும்.....

கடந்த வாரம் நடைபெற்ற இரண்டு வகையான நியமனங்கள் இன வேறுபாட்டினை மேலும் உச்ச நிலைக்குச் செலுத்தும் படிக் கட்டுக்களாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அவற்றில் முக்கியமான நியமனமாக கிழக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி ஆணையாளர் பதவிக்கு முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை நியமித்ததால் எழுந்துள்ளது.

முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களை நியமிப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இனவாத அடிப்படையில் எதிர்ப்பதாக இனவாத அரசியலைக் கொண்டு கோலோச்ச முனையும் யாரும் தப்பர்ப்பிதம் செய்ய முற்படலாம். ஆனால் வடமாகாண சபையில் தமக்குக் கிடைத்த மிகையூதிய ஆசனத்தை முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு விட்டுக் கொடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தார்மீக, சனநாயக முற்போக்குச் சிந்தனையை வெளிக்காட்டியிருப்பதை யாரும் மறந்து விட முடியாது.

அவ்வாறாயின் விசேடமாக இந்த நியமனத்தை மட்டும் தமிழ்க் கட்சி விரும்பாத காரணம் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தால் உள்ளூராட்சித் திணைக்களத்தில் அதிகாரக் கட்டமைப்பில் தமிழர்கள் எவரும் இல்லாதிருப்பதே காரணமாக இருக்கின்றது. எனவே இனச் சமநிலையை நியமனங்களிற் பேணும் பொருட்டு இந் நியமனத்தை எதிர்க்கும் தார்மீகப் பலத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ளது என்பதுடன் அவ்வாறு எதிர்க்கும் கட்டாயத்தையும் கிழக்கில் வாழும் அனைத்து மக்களின் நலன் கருதியே மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்திற் கொள்ள வேண்டியும் உள்ளது.

ஏனைய எந்த மாகாண சபையிலும் இல்லாத, ஆனால் கிழக்கில் மேற்கொள்ளும் அனைத்து நியமனங்களிலும் இன விகிதாசாரத்தை பேண வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கும் ஆளுனர் நியமனங்களில் இன விகிதாசாரக் கணக்கைக் கருத்திற் கொள்ளும் போது தமிழர்களையும் முஸ்லிம்களையும் ஒரே இனம் எனக் கருத்திற்கொண்டு செயற்படுவதை காணமுடிகின்றது.

ஒரே மொழி, இரு இனம் என்பதை தேவைக்கேற்ப கருத்திற் கொள்வதும், கருத்திற் கொள்ளாது விடுவதனதும் பின்னணியில் இன வேறுபாட்டை உச்சப்படுத்தி, அதிருப்தியினை இனங்களிடையே ஏற்படுத்தும் மறைகரச் செயற்பாடுகள் உண்டோ? என்னும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இதய சுத்தியின்றிய செயற்பாடுகள் மேலும் மேலும் இனப் பாகுபாட்டை ஆள, அகலமாக்கி வருவதை அனைவரும் உணர்ந்து வரும்வேளையில் வாய் வார்த்தைகளில் சமாதானத்தை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை அரசோச்சும் தரப்பு விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு நடவடிக்கையினதும் உண்மை நிலையை இனக் கண்கொண்டு பாராமல் மனக் கண்கொண்டு பார்க்க முற்பட்டால் இணக்கம் அருகில் இருக்கும்.....

# காணாமல் போனவர்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கையளிப்பு



மூதூர் பிரதேசத்திலிருந்து காணாமல் போனவர்கள் சம்பந்தமாக 90 முறைப்பாடுகள் மூதூர் பீஸ் ஹோம் அமைப்புக்கு கிடைத்துள்ள நிலையில், அந்த முறைப்பாடுகள் ஜனாதிபதி ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன. ஜனாதிபதி ஆணைக்குழுவிடம், மூதூர் பீஸ் ஹோம் அமைப்பு 02.01.2014 வியாழக்கிழமை இந்த முறைப்பாடுகளை கையளித்துள்ளது. காணாமல் போனவர்கள் சம்பந்தமாக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அனுமதியோடு, மூதூர் பீஸ்ஹோம் அமைப்பானது காணாமல் போனவர்கள் சம்பந்தமான முறைப்பாடுகளை சேகரிக்கும் பணியில் கடந்த இரு வாரங்களாக ஈடுபட்டிருந்தது.

மூதூர் பிரதேசத்திலிருந்து காணாமல் போனவர்களின் உறவினர்கள் பலர் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகளை செய்வதற்கு ஆர்வம் காட்டாத நிலையிலேயே, பீஸ் ஹோம் அமைப்பானது பொதுமக்களுக்கு அது சம்பந்தமாக தெளிவூட்டி முறைப்பாடுகளை சேகரிப்பதில் ஈடுபட்டு வந்திருந்தது

# பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு - 2013



முனைக்காடு தெற்கு பாலர் பாடசாலையில் 2013.12.30ம் திகதி பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு பாலர் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் பாலர் பாடசாலையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சிறுவர்களுக்கான சிறந்த கல்வியை புகட்டி அத்திவாரமாக இருக்கின்ற ஆசிரியர்களை மாலை அணிவித்து கௌரவித்தலும் பாடசாலையில் சிறந்து விளங்கிய மாணவர்களை கௌரவித்தும் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றதுடன்.மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. இந் நிகழ்வில் பட்டிப்பளைப் பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பளார் திரு.ந.தயாசீலன், யுக்டாநிறுவன தலைவர் திரு.அ.கருணாகரன், மட்/முனைக்காடு விவேகானந்த வித்தியாலய அதிபர் திரு.பொ.நேசதுரை ஆகியோரும் பிள்ளைகளது பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர். (நிரேஸ்)



## கைக்குண்டு வெடித்ததில் கைவிரல்களை இழந்த சிறுவன்

சம்பூர் பிரதேசத்தை சேர்ந்த சிவகுமார் விக்னேஸ்வரன் எனும் 16வயது சிறுவன் விளையாட்டுப் பொருள் என நினைத்து கைக்குண்டு இரண்டினை கையில் ஏந்தி விளையாடிய வேளையில் குண்டு வெடித்ததில் தனது இரண்டு கை விரல்களையும் இழந்த சம்பவம் ஒன்று சம்பூர்சேனையூர் பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

27.12.2013 வெள்ளிக்கிழமை காலை 7மணியளவில் சம்பூரைச் சேர்ந்த சிவகுமார் என்பவரின் மகன் விக்னேஸ்வரன் வயலில் விளையாடிக் கொண்டிருந்த வேளை அருகில் இருந்த குளத்திற்கருகில் இரண்டு கைக்குண்டுகள் கிடந்ததாகவும் அதை விளையாட்டுப் பொருளாகக்கருதி கையில் ஒன்றையொன்று ஏந்தி விளையாடிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக அது வெடித்ததால் தனது இரண்டு கை விரல்களும் சிதற சம்பூர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு தற்போது சிகிச்சை பெற்று வருவதாக விக்னேஸ்வரனின் தாயார் சிவகுமார் நாகராணி தெரிவித்தார். (அனுர-உதய)

## சுடுகலன் ரவைகளுடன் காவல்துறை சார்ஜன்ட் கைது

இரண்டு இரவைப் பொதிகளைத் தனது சொந்தப் பாதுகாப்பில் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட காவல்துறை சார்ஜன்ட் ஒருவர் திருகோணமலையில் கைதாகியுள்ளார்.

தனது மேலங்கிக்குள் இவ்விரு இரவைப்பொதிகளையும் வைத்திருந்த சார்ஜனின் மோட்டார் சைக்கிள், பயணத்தின் போது மக்கர் பண்ணவே அருகிலிருந்த திருத்தகத்தில் மோட்டார் சைக்கிளை ஒப்படைத்துவிட்டு மறந்து போய் தனது மேலங்கியையும் அம் மோட்டார் சைக்கிளில் கொழுவி விட்டு குறித்த சார்ஜன் வெளியேறியுள்ளார்.

திருத்தத்தின் போது மேலங்கிக்குள் மறைந்திருந்த ரவைப்பொதிகளைக் கண்ணுற்ற திருத்தக உரிமையாளர் காவல்துறைக்கு மேற்கொண்ட புகாரையடுத்தே விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. சட்டவிரோதமாக ரவைக்கூடுகளைத் தனது பாதுகாப்பில் வைத்திருந்த சார்ஜன் கைது செய்யப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

## ஸ்ரீதரனை இல்லாதொழிக்க முயற்சி

*திவயினஃ*

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனைப் பாராளுமன்ற ஆசனத்தில் இருந்து அகற்றும் செயற்பாடுகள் மீண்டும் முனைப்புப் பெறுவதாக சிங்கள் செய்திப்பத்திரிகையான திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கான முன்மொழிவைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றிக் கொள்ள ஆளும் அரச கட்சியும் அதன் பங்காளிக் கட்சிகளும் இவ்வாண்டில் திட்டமிட்டுள்ளதாக அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

## வெடிகுண்டு வெடித்ததில் சிறுவன் பலி

நிலத்துக்கடியில் புதையுண்டு கிடந்த குண்டு வெடித்ததால், செந்தூர் புடவைக்கட்டு முகமது அலி முகமது ரமேஸ் (வயது 36) அலியார் ருஸ்பியா (வயது 35) ஆகியோரின் மகனான மு.ரினோஸ் (வயது 05) மரணமானார்

கடந்த 27.12.2013 மாலை 4 மணியளவில் செந்தூர் புடவைக்கட்டுப் பகுதியைச் சேர்ந்த முகமது அலி முகமது ரமேஸ் என்பவரின் நான்கு பிள்ளைகளும் வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த வேளையில் தனது மூன்றாவது மகனான ரினோஸ் கையில் பெரிய ஆணி ஒன்றை சுத்தியலைக் கொண்டு நிலத்தில் அடித்து விளையாடிக் கொண்டிருந்தார்.

அவ்வாறு அவர் நிலத்தில் அடிக்கும் போது நிலத்திற்கு அடியில் புதையுண்டு கிடந்த குண்டு வெடித்ததில் தனது மகன் சம்பவ இடத்திலேயே (இடுப்புப் பகுதிக்குக் கீழ் உடல் சிதறிய நிலையில்) உயிரிழந்ததாகவும் தனது மற்ற பிள்ளைகளான ரவரான் (வயது10) ரினோஷா (வயது312) ஆகியோர் காயப்பட்டு திருமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும் முகமது அலி முகமது ரமேஸ் மலைமுரசிற்கு தெரிவித்திருந்தார். (அனுர-உதய)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் இலங்கை தொடர்பாக இரண்டு தீர்மானங்களை முன்வைக்க ஏற்பாடு?

சர்வதேச அழுத்தம் என்பது அரசாங்கத்துக்கு அவ்வப்போது சிறிய அச்சத்தை ஏற்படுத்தினாலும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான கருவியாக அமைந்து விடுகின்றன. சிங்கள பௌத்த தேசியவாத வளர்ச்சிக்கும் வலுச்சேர்க்கின்றன.



அதன் காரணமாக சஜித் பிரேமதாசாவும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைச் சபையின் பொறுப்பை பௌத்த தேரர்கள ஏற்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணையை எதிர்கொள்ள அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருகின்றன.

வெளியுறவு அமைச்சுக்கும் மனித உரிமைகள் அமைச்சுக்கும் ஜனாதிபதி கடும் உத்தரவுகளை பிறப்பித்திருக்கின்றார். விசேட அதிகாரிகள் குழு ஒன்றை அமைப்பது, வடக்கு கிழக்கில் இருக்கும் பொது நிலையினர், கல்விமான்கள் அடங்கிய குழு மற்றும் அமைச்சர்கள் அடங்கிய குழுக்கள் ஒவ்வொன்றையும் தனித் தனியாக அமைப்பது போன்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டை விட இம்முறை ஜெனிவாவுக்கு செல்லும் பிரதிநிதிகள் இலங்கை அரசாங்கத்தின் போருக்கு பிந்திய செயற்பாடுகளை ஆதாரங்களுடன் நிரூபிக்கும் வகையில் பேச வேண்டும் என்ற உத்தரவு ஜனாதிபதியினால் முன்மொழியப் பட்டிருப்பதாக கூறப்படுகின்றது.

### கொழும்பிலும் சந்திப்புகள்:-

மார்ச் மாதத்திற்கு முன்னர் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களை சந்தித்து போருக்கு பிந்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் குறித்து விளக்கமளிப்பதற்கு வெளியுறவு அமைச்சு தீர்மானித்துள்ளது என்றும் அதற்காக சிறப்பு அதிகாரிகள் குழு ஒன்றை அமைச்சர் பேராசியர் பீரிஸ் நியமித்துள்ளார் என்றும் வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக இந்த செயற்திட்டம் நடைபெறுவதாகவும் வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

2014 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என அரசாங்கம் கூறியுள்ளது. இந்த நிலையில் ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடரில் உறுப்பு நாடுகள் முன்வைக்கவுள்ள தீர்மானம் கடுமையானதாக இருக்கும் எனவும் அது இலங்கைக்கு சர்வதேச மட்டத்தில் பாதிப்புகளை ஏற்படுத்தும் எனவும் அரசாங்கத்தின் உயர்மட்டம் கருகின்றது.

அந்த பாதிப்புகள் பொருளாதார ரீதியில் அமையும் என எதிர்பார்க்கப்படுவதால் தங்கள் பக்க நியாயப்பாடுகளை முடிந்தவரை எடுத்துரைக்க அரசாங்கம் தீவிரமாக ஈடுபடவுள்ளது என்ற தகவல் வெளியில் கசிந்துள்ளன.

### ஆணைக்குழு அறிக்கை

படிப்பினைகள் மீளிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ள முக்கியமான நான்கு சிபாரிசுகளை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அழுத்தம் கொடுத்திருந்தன. கடந்த வருடம் ஜெனீவா தீர்மானத்திலும் கூறப்பட்டிருந்தது. ஆனால் உரிய முறையில் விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ எண்ணிக்கை



களை குறைப்பது. சிவிலியன் நடவடிக்கைகளில் இராணுவ தலையீடுகளை நீக்குவது போன்ற விடயங்கள் அரசாங்கத்தினால் செய்யப்படவில்லை.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வது, முன்னாள் போராளிகளின் விடுதலை, விடுதலை செய்யப்பட்ட போராளிகளின் பாதுகாப்பு போன்ற விடயங்களிலும் பலவீனமான செயற்பாடுகள் காணப்படுகின்றன.

குறித்த இந்த விடயங்களில் அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அரசாங்கம் ஓரளவுக்கேனும் சில விட்டுக்கொடுப்புகளை செய்வதற்கான ஏற்பாடுகளும் இருப்பதாக உள்ளக தகவல்கள் கூறுகின்றன.

நிரந்தர அரசியல் தீர்வு குறித்த விடயங்களிலும் முன்னேற்றம் இல்லை என்ற காரணத்தினால் தென் ஆபிரிக்க மத்தியஸத்தம் பற்றிய பேச்சுக்கள் அடிபட்டன.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அந்த முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் எதிர்ப்பு வெளியிட்டதால் அந்த முயற்சியும் கைவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத் தொடரை எதிர்கொள்ளவுள்ள அரசாங்கம் மேற்படி அணுகுமுறைகள் மூலம் குறைந்தபட்சமான சாதகமான நிலைமையை தோற்றுவிக்க முற்படுகின்றது.

ஆனாலும் அது காலம் கடந்துவிட்ட அணுகுமுறை என்றுதான் கொழும்பில் உள்ள இராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

### ஆயர்கள் அழைக்கப்படலாம்

ஜெனீவா மனித உரிமைச் சபையின் கூட்டத்தொடரில் அரசாங்கங்களின் பிரதிநிதிகள் மாத்திரமே கலந்துகொள்ள முடியும். வேறு அரசியல் கட்சிகள் அல்லது வேறு பிரதிநிதிகள் யாரும் அதிகாரபூர்மாக பங்குபற்ற முடியாது.

ஆனால் கூட்டத் தொடர் நடைபெறும் நாட்களில் மண்டபத்துக்கு வெளியே அரசசார்பற்ற நிறுவனங்களின் விளக்கமளிக்கும் சிறிய கூட்டங்கள், செயற்பாட்டு திட்டங்கள், ஆலோசனைக் கூட்டங்கள் நடைபெறும்.

அவ்வாறான கலந்துரையாடல்களுக்கு இம்முறை வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் சபையினால் சிலர் அழைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஆனாலும் அவ்வாறு அழைக்கப்படுபவர்களின் பாதுகாப்பு தொடர்பான கேள்விகள் எழுகின்ற மையினால் அந்த முயற்சியை மனித உரிமைச் சபை கைவிடக்கூடிய நிலையும் உண்டு.

எனினும் ஆயர்களை அழைப்பதற்கான ஏற்பாடுகளும் இருப்பதாக கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலக வட்டாரங்கள் குறிப்பிட்டன.

மனித உரிமைகள் முன்னேற்றம் குறித்தும் நேரடியாகவும் பக்கச்சார்பு அற்ற முறையிலும் அறிந்து கொள்ள மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை [illegible]க்கின்றார் என்பதுதான் உள்ளக தகவல்கள்.

அமெரிக்காவின் சிறப்பு பிரதிநிதிகள் இந்த வாரம் கொழும்புக்கு வரவுள்ளமைக்கான காரணங்களும் அதுதான்.

### அரசாங்கத்துக்கு சாதகம்

மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைச் சபையின் கூட்டத்தில் இலங்கை தொடர்பாக இரண்டு தீர்மானங்கள் முக்கியம் பெறவுள்ளன. ஒன்று அமெரிக்கா சமர்ப்பிக்கவுள்ள பிரேரணை. இரண்டாவது ஆணையாளர் நவநீதம் பிள்ளையின் நிபந்தனைகள், தீர்மானங்கள்.

ஆனால் அவற்றை அரசாங்கம் எவ்வாறு ஏற்கும் என்பதும் அந்த இரண்டு விடயங்களும் அனைத்து நாடுகளினாலும் முழுமையாக ஏற்கப்படுமா? என்பதும் கேள்விக்குரியது.

ஏனெனில் இம்முறை சீனா மனித உரிமைச் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ளமை இலங்கைக்கு சாதகமான விடயம்.

ஆகவே அடுத்த ஆண்டு இலங்கை அரசாங்கத்திடம் இருந்து எதிர்பார்க்கும் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பில் மனித உரிமைச் சபையும் அமெரிக்காவும் இன்னும் கூடுதல் வேலைத் திட்டங்களில் ஈடுபட வேண்டிய தேவை உள்ளது. ஆனால் உலக அரசியல் ஒழுங்கு அதற்கு இடமளிக்குமா என்பது மற்றுமொரு கேள்வி.

இந்தியாவில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சி அமைத்தாலும் இலங்கை அரசுக்கு எதிரான சர்வதேச அழுத்தங்களை அதிகரிக்க அனுமதிக்க மாட்டார்கள் என்பது கணக்கூடு. ஏனெனில் அது இந்திய வெளியுறவுக் கொள்கையுடன் சம்மந்தப்பட்டது.

எனவே ஜியோ பொலிற்றிக்ஸ் எனப்படும் பிராந்திய அரசியல் நலனில் இருந்து விடுபட்டு இலங்கையில் சகல சமூகங்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச சமூகம் சிந்தித்தால் மாத்திரமே இலங்கை அரசாங்கத்தின் போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்?

இல்லையேல் சர்வதேச அழுத்தங்கள் என்பது மஹிந்த ராஜபக்ச அரசாங்கத்துக்கு சிறிய அச்சங்களை அவ்வப்போது ஏற்படுத்தினாலும் தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான கருவியாக அது அமைந்து விடுகின்றது.

**அ.நிக்ஸன்**

- நன்றி -
உலகத் தமிழ் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய ஆண்டில் இலங்கைக்குத் தொடங்கும் சோதனை

புதிய ஆண்டு இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சோதனைகளுடன் தான் பிறந்திருக்கிறது. அதுவும் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களும், இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், என்றுமில்லாதளவுக்கு நெருக்கடியைக் கொடுக்கின்ற ஒன்றாக அமைவதற்கு



வாய்ப்புகள் உள்ளதாக கருதப்படுகிறது.

இது ஒன்றும் ஜோதிடக் குறிப்பு அல்ல. ஜெனிவாவில் இலங்கை அரசு நிறைவேற்ற நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, அந்த இலக்கை அடைவதற்கு இலங்கை அரசாங்கம் பயணித்துள்ள தொலைவு, அதற்காக அரசாங்கம் செய்துள்ள அர்ப்பணிப்பு என்பனவற்றை யதார்த்தமாக மதிப்பிடும் ஒருவரால், இந்தக் கணிப்பை முன்வைப்பது ஒன்றும் கடினமில்லை.

இதற்குப் பெரிய ஜோதிட அறிவோ, அரசியலைக் கணிக்கும் ஆற்றலோ வேண்டியதில்லை.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் முன்வைக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய, இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுகளை இன்னமும் முழுமையாக நிறைவேற்றவும் இல்லை, அதற்கு முழு முயற்சிகளை எடுக்கவுமில்லை.

இந்தநிலையில், இன்னும் சரியாக மூன்று மாதங்களில் ஜெனிவாவில் தொடங்கப் போகும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 25ஆவது அமர்வு இலங்கைக்கு சாதகமானதாக அமையும் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது.

இலங்கை அரசாங்கமே கூட, தாம் ஜெனிவாவில் எத்தகைய சவாலையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறது என்று கூறுகின்ற நிலையில், அது மிகவும் கடினமான சவால் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

எனினும், ஜெனிவாவில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் நகர்த்தப் போகும் காய்களை முறியடிப்பதற்கான வியூகங்களை இலங்கை அரசாங்கமும் வகுத்துச் செயற்படாமல் இல்லை.

மூன்று கட்டங்களாக இந்த நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு மனித உரிமைகள் நிலை குறித்து விரிவாக விளக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதுபோலவே, வெளி நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களும் அந்தந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு விளக்கமளிக்கவுள்ளன.

அடுத்து, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க தலைமையிலான குழுவொன்று ஐ.நா மனிதஉரிமைகள் ஆணைக்குழு மற்றும் பேரவையின் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கும் முயற்சியிலும் இறங்கவுள்ளது.

அரசாங்கத்தின் முக்கியமான அமைச்சர்கள் அதிகாரிகளுக்கு அடுத்த மூன்று மாதங்களும் நிம்மதியான உறக்கம் வரப் போவதில்லை.

ஏனென்றால், கடந்த இரண்டு ஆண்டுகளையும் விட கடுமையான நிலைப்பாட்டை மேற்குலகம் எடுப்பதற்கு வாய்ப்புள்ளதால், அதை



முறியடிப்பதற்கு, எல்லா வழிகளிலும் முயற்சிக்க வேண்டிய கட்டாயம் அரசாங்கத்துக்கு உள்ளது.

எனவே, அரசாங்கம் தனது முழு வளங்களையும் ஒன்று திரட்டி சர்வதேச அளவில் பிரசாரத்தில் இறங்கி, ஜெனிவா நெருக்கடியில் இருந்து தப்பிக்க முனையும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தப் பின்னணியில், வரும் 10ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலர் நிஷா தேசாய் பிஸ்வால், இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

பொதுவாக, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு முன்னதாக, அதுபற்றிய இலங்கை அரசாங்கத்தை எச்சரித்து, இணங்கி நடக்கும்படி கோருவதற்காக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தமது உயர்நிலை அதிகாரிகளை கொழும்புக்கு அனுப்புவது வழக்கம்.

கடந்த ஆண்டும் அதற்கு முந்திய ஆண்டும், பெப்ரவரி மாதத்தில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உயர்மட்ட அதிகாரிகள் கொழும்புக்கு வந்திருந்தனர்.

ஆனால், இந்த மாதம் கொழும்பு வரவுள்ள நிஷா தேசாய் பிஸ்வால் தலைமையிலான குழு அத்தகைய இறுதி எச்சரிக்கையை விடுப்பதற்கான குழுவாக இருக்குமா என்பது சந்தேகம் தான்.

ஏனென்றால், ஜெனிவா கூட்டத் தொடர் ஆரம்பமாவதற்கு இன்னமும் மூன்று மாதங்கள் உள்ளன.

ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, தமது அறிக்கையை மார்ச் 26ஆம் திகதியே சமர்ப்பிக்கவுள்ளார்.

எனவே, இந்த மூன்று மாத கால இடைவெளிக்குள் இலங்கை அரசாங்கம் முன்னேற்றகரமான எந்த சமிக்ஞையையும் காட்டாது என்று இப்போதே தீர்மானிக்க முடியாது.

போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையை நடத்தும் அழைப்பை இதுவரை அமெரிக்கா விடுத்திருக்கவில்லை.

உள்ளகப் பொறிமுறை மூலம் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்றே அமெரிக்கா ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வருகிறது.

அது முடியாத கட்டத்தில் தான் அடுத்த கட்டங்கள் குறித்து சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று குறிப்பிட்டதே தவிர, எந்தவொரு சந்தர்ப்பத்திலும், சர்வதேச விசாரணை பற்றிய எச்சரிக்கை அமெரிக்காவிடம் இருந்து வந்ததில்லை.

அதுபோல, வரும் மார்ச் மாதத்துக்குள் சுதந்திரமான நம்பகமான உள்ளக விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்கத் தவறினால் தான், சர்வதேச விசாரணையை வலியுறுத்த வேண்டிய வரும் என்று பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனும், ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் குறிப்பிட்டிருந்தனர்.

அதற்கிடையில், ஜெனிவா நெருக்கடியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக, வரும் மார்ச் மாதத்துக்கு முன்னதாக, தென்னாபிரிக்காவின் உதவியுடன் உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை அரசாங்கம் அமைக்கவுள்ளதாகவும் பரவலாக கருத்து நிலவுகிறது.

இத்தகைய பின்னணியில், வரும் மார்ச் மாதம் நடக்கவுள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக மற்றொரு தீர்மானம் கொண்டு வரப்போவது தொடர்பான இறுதி எச்சரிக்கையை இப்போதே அமெரிக்கா வெளிப்படுத்த முனையாது.

ஆனால், நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் எந்தளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளன, ஜெனிவா தீர்மானத்தை அரசாங்கம் மதித்துச் செயற்படுகிறதா என்பதை நிஷா தேசாய் பிஸ்வால் உன்னிப்பாக கண்காணிப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அடுத்தடுத்த கட்ட நகர்வுகளுக்கான ஒரு முன்னாயத்த நடவடிக்கை என்றும் இதனைக் குறிப்பிடலாம்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த நிஷா தேசாய் பிஸ்வால், இந்தப் பதவிக்கு பெயர் பிரேரிக்கப்பட்ட போது செனெட் வெளிவிவகாரக் குழு முன்பாக நிகழ்த்திய உரையும் சரி, நியமனம் உறுதியான பின்னர் வொசிங்டனில் வெளியிட்ட கருத்தும், இலங்கை அரசாங்கத்தினால் வெறுப்புடனேயே நோக்கப்பட்டது.

அதாவது, இலங்கை தொடர்பான கடும் போக்கிலான கருத்தையே அவர் முன்வைத்திருந்தார்.

எனவே, அவர் தனது முதலாவது இலங்கைப் பயணத்தின் போது, அரசாங்கம் விரும்புகின்ற வகையில் செயற்படவோ கருத்துகளை வெளியிடவோ வாய்ப்புகள் குறைவு.

நிஷா தேசாய் பிஸ்வால் வரும் 10ஆம் திகதி கொழும்பு வருவதற்கு வாய்ப்புகள் உள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆனால், இது இன்னமும் இலங்கை அரசாங்கத்தினாலோ, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினாலோ உறுதிப்படுத்தப்படவில்லை.

எனினும், நிஷா தேசாய் பிஸ்வால், கொழும்பு வருவதற்கு வெளிவிவகார அமைச்சின் அனுமதியைக் கோரியுள்ளார் என்பதை, வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்த வருகை எப்படியும் நடக்கும் என்பதால், அரசாங்கத்துக்கு புதிய ஆண்டு நெருக்கடியுடன் தான் பிறந்துள்ளது.

நிஷா தேசாய் பிஸ்வாலை சமாளிப்பது மட்டும் அரசாங்கத்துக்கு இப்போதுள்ள பிரச்சினையல்ல.

அதற்கு அப்பாலும் இந்த ஆண்டில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம், ஜெனிவா அமர்வுக்காக பல்வேறு மட்டங்களில் தகவல்களையும் தரவுகளையும் திரட்டி வருவதாகவும் தெரிகிறது.

இவையெல்லாம் இந்த ஆண்டு ஜெனிவாவில் இலங்கைக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கச் செய்துள்ளது.

ஆக, போர் முடிவுக்கு வந்த பின்னர், சர்வதேச அரங்கில் அரசாங்கம் மிகப்பெரிய சிக்கல்களை சந்திக்கப் போகும் ஆண்டாக 2014ஆம் ஆண்டு அமையலாம்.

**கே. சஞ்சயன்**

(நன்றி- தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையிற் சோழர்கள்

திரு செ.குணசிங்கம் அவர்களால் 1974 இல் வெளியிடப்பட்ட மானாங்கேணிச் சாசனத்தின் சிதைந்து போன பகுதிகளை நிரப்பி ஒழுங்கமைக்கப்பட்ட முழுவடிவம் " ரான உடையார் ஸ்ரீ சோழ இல(ங்கேஸ்) வரதேவற்கு யான் எ(ட்டாவது) (மும்மு)டி சோழ மண்ட(லத்து) (இராஜே)ந்ர சோழ வள நாட்(டு)" என்று தொடர்கிறது.

சாசனத்தின் முதல்வரி சோழ இலங்கேஸ்வரனைக் குறிக்கிறது. இரண்டாவது வரி இச்சாசனம் சோழ இலங்கேஸ்வரனின் ஏழாவது அல்லது எட்டாவது ஆண்டில் பொறிக்கப்பட்டது என்பதனை வரையறுக்கிறது.

மூன்றாவது வரி முதல் ஐந்தாவது வரையுள்ள வரிகள் இலங்கையான மும்முடிச் சோழமண்டலத்தில் இருந்த வளநாடான இராஜேந்திர சோழவள நாட்டினைக் குறிப்பிடுவதுடன் அதன் மறுபெயராக "மும்முடிச் சோழ வள நாடு" என்னும் பெயரினையும் அறியத்தருகிறது.

தொடர்ந்து வரும் ஆறு முதல் எட்டுவரையுள்ள வரிகள் திருகோணமலை ஸ்ரீ மத்ஸ்யகேஸ்வரத்தின் மூலஸ்தானம் பற்றியும், ஈஸ்வரமுடையார் கோயில் ஒன்றினைப் பற்றியும் சொல்கிறது. அதன் பின்வரும் பகுதி சோழமண்டலத்து இராஜேந்திரசிங்க வளநாட்டு மூவேந்த வேளாண் கணபதி பற்றியதாக அமைந்திருக்கிறது.

திருகோணமலை மத்ஸ்யகேஸ்வரம், சோழ இலங்கேஸ்வரன் என்பன



பற்றிக் குறிப்பிடும் இச்சாசனம் மிக முக்கியமான வரலாற்றாவணமாகும். சோழ இலங்கேஸ்வரன் என்ற பட்டம் சோழர்கள் தாம் கைப்பற்றி ஆண்ட நாடுகளை எவ்வாறு ஆட்சிபுரிந்தார்களோ அதே முறையில் ஈழமான மும்முடிச் சோழ மண்டலத்தையும் ஆண்டார்கள் என்பதனை ஆதாரப்படுத்திநிற்கிறது.

சோழமண்டலங்களுக்கு அதிபர்களாக சோழ இளவரசர்களை நியமிக்கும் பழக்கம் முதலாம் இராஜேந்திரன் காலத்தில் ஆரம்பமாகியது. சோழராட்சியில் பாண்டிய நாட்டுக்குரிய இராசப்பிரதிநிதியாக சோழவம்ச இளவரசன் நியமிக்கப்பட்டு அவனுக்கு சோழ பாண்டியன் என்ற பட்டம் வழங்கப்பட்டதையும் அது போலவே கங்கபாடி இராட்சியத்திற்கு சோழகங்கன் நியமிக்கப்பட்டதையும் குறிப்பிடலாம்.

கி.பி. 1055 ஆண்டளவில் எழுதப்பட்ட இராஜேந்திர சோழனுடைய மெய்க்கீர்த்தியில் சோழபாண்டியன் , சோழகங்கன், சோழகேரளன் ,சோழ அயோத்திய ராசன், சோழ கனகராசன், சோழகன்னகுசச்சியராசன் , சோழவல்லபன் என்னும் பட்டங்களைப் பெற்றிருந்த சோழர்களைப் பற்றிச் சொல்லப் படுவதைக் காணலாம்.

இலங்கை அரசனை இலங்கேஸ்வரன் என்று குறிப்பிடும் வழக்கம் தமிழர் வரலாற்றில் பண்டைக்காலம் முதல் வழக்கில் இருப்பதாகும். தேவாரப் பாடல்களில் இலங்கை மன்னன் இராவணன் இலங்கேஸ்வரன் என்றழைக்கப்படுவதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

எனவே சோழ இலங் கேஸ்வரன் என்பது இலங்கைக்கான மும்முடிச் சோழ மண்டலத்தை நிர்வகித்த சோழப்பிரத்நிதியின் பட்டப்பெயர் என்பது உறுதியாகிறது.

சோழ இலங்கேஸ்வரனின் ஏழாவது அல்லது எட்டாவது ஆட்சியாண்டில் எழுதப்பட்ட இச்சாசனம் குறிப்பிடும் இன்னொரு செய்தி அக்கால வழக்கில் கோணேஸ்வரம் மத்ஸ்ய கேஸ்வரம் என்றழைக்கப்பட்டது தொடர்பானதாகும்...........**(தொடரும்)**

**-வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்-**

## எத்தனை காலம் தான்......?

கிழக்கு மாகாணத்தை தலைமையமாக கொண்ட அந்த பாரிய நிறுவனத்திற்கு திருகோணமலை மட்டக்களப்பு அம்பாறை போன்ற மாவட்டங்களில் பல கிளை நிறுவனங்கள் உண்டு. ஒவ்வொரு கிளை நிறுவனங்களுக்கும் பொறுப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டு அதன் நோக்கத்தினை எய்துவதற்கான பல முன்மொழிவுகள் ஊடாக பல முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கிளை நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்கள் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களை பல அபிவிருத்தி திட்டங்கள் மூலம் மேம்படுத்துவது மாத்திரமல்ல தலைமையகத்திற்கு அவற்றின் உச்ச பயன்பாடு, முன்னேற்றம் போன்றவைகளை அறிக்கையிடல் வேண்டும்.

அதனால் கிளைகளுக்கிடையே பலவித போட்டிகள் நிகழ்வது தவிர்க்க முடியாதவைகளாகும். கிளை பொறுப்பதிகாரிதான் நற்பெயர் வேண்டு வதற்காக பல தந்திரோபாயங்களையும் கையாள வேண்டிவரும். சிலர் தொடர்ந்தும் குறிப்பிட்ட கிளையில் தாமே கொடிகட்டி பறக்க வேண்டுமென்பதற்காகவும் தலைமையகத்தை நிதமும் குளிராக வைத்துக் கொள்வதற்காகவும், பரபிரயத்தனங்களை முன்னெடுப்பது வழமையான செயற்பாடுகளாகும்.

மாகாண மட்டத்திலோ அல்லது மாவட்ட மட்டத்திலோ சிறந்த மதிப்பெண்களை பெறுவதற்காக இரவு பகல் பாராது கஷ்ரப்பட்டு உழைப்பது. கிளை பொறுப்பாளர்களின் முக்கிய பணி என்று கூறினால் அது மிகையாகாது.

பொறுப்பதிகாரிகள் தங்களின் மேன்மைக்காக அங்குள்ள பணியாளர்களிடம் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்துமளவுக்கு வேலை வேண்டுவார்கள் மேலும் பணியாளர்கள் ஒன்றாக இணைந்து உண்மையாகவும் கடுமையாகவும் உழைத்தாலும் நற்பெயர் வேண்டுவது அந்த கிளை பொறுப்பதிகாரி மட்டுமே.

குறித்த ஒரு பொறுப்பதிகாரி ஆரம்பத்தில் நல்ல பெயரை பெற்றிருந்தால் அவர் அதைவிட ஒரு படி முன்னோக்கி செல்லவே பார்ப்பாரே தவிர எச்சந்தர்ப் பத்திலும் பின் நோக்கிச் செல்லமாட்டார் அவர் அவ்விதம் நடந்து கொள்ளும் போது அவர் புரியும் தவறுகளைக் கூட தலைமையகம் கண்டு கொள்ளாது செயல்படும்.

அவ்விதமான வொருவரே தலைமையகத்தின் செல்லப் பிள்ளையாக கணிக்கப்படுவார். அது மாத்திரமல்ல சகல சலுகைகள், அந்தஸ்த்துக்கள் அனைத்தும் அவர் எதிர்பாராமலே அவர் காலடியில் வந்து குவியும்.

தலைமையகத்தின் செல்வாக்கு மிக்க ஒரு பொறுப்பதிகாரி அங்கு தான் வைத்ததுதான் சட்டம் என்று துள்ளிக் குதிப்பார். பணியாளர்களை கசக்கிப் பொறுப்பதிகாரியின் அருகில் செல்லக் கூட பயப்படுவார்கள்.

மேலும் பொறுப்பதிகாரி தனக்கு விதவாறுமான அணியொன்றை திரட்டி எப்போதும் ஆயுத்தமாக வைத்துக் கொள்வார். அந்தக் குழு பொறுப்பாளருக்கு துதி பாடிக்கொண்டே இருக்கும். அவருக்க எதிராக யாரும் செயல்ப் பட்டால் அவ்வளவுதான் அவர்கள் பெட்டிகள் படுக்கைகளுடன் இடமாற்றத் திற்கு ஆயுத்தமாக இருக்க வேண்டும்.

அது மாத்திரமல்ல மிக தவறாக நடக்கிறார் மேலும் அவரின் நடவடிக்கைகள் முற்றிலும் தவறு என்று ஆனால் அந்தக் குழு எது என்னவாக இருந்தாலும் பொறுப்பதிகாரி மிகவும் நல்லவர் அவரின் தலைமைப்பீடம் நம்புகின்ற மாதிரி காய்களை நகர்த்துவதே குழுவின் அதிவிசேட பணியாகும்.

அந்த கிளை பொறுப்பதிகாரியிடம் சகலவிதமான ஆசைகலும் இருந்து வந்தன அவர் திருமணம் செய்திருப்பது முன்னர் தான் ரியஷன் வகுப்பில் பாடம் சொல்லிக் கொடுத்த மாணவியொருவராலே அந்த விடயம் சகலருக்கும் தெரியும். இருப்பினும். அவரின் நிர்வாகத்திறமையின் காரணமாக அவர் இழைத்த தவறுகள், மேலும் இழைத்துக் கொண்டிருக்கும் தவறுகள், அங்குள்ள எவரினதும் கண்களிலும் தென்படுவதில்லை.

நிறுவன தலைமையக உயர் அதிகாரிகளுடன் சேர்ந்து ஒத்த ஊதுவதில் அவருக்கு நிகர் அவரே தலைமையகத்தின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அனைத்து கிளைகளிலும் அந்த பொறுப்பதிகாரியின் கிளை மிக சிறப்பாகவும் அதனூடாக கிடைக்கும் பெறு பேறுகலும் ஏனைய கிளைகளை விட முன்னணியில் தொடர்ந்து இருந்து வருவதை விசேடமாக குறிப்பிட்டே ஆக வேண்டும்.

குறித்த தலைமையகத்தின் அதிகாரியொருவர் [illegible] சார்ந்தவர் அ[illegible] ணமாகி அவருக்க வயது வந்த பிள்ளைகள் இருந்தாலும் அவருக்கு அந்த நிறுவனத்தை சார்ந்த தமிழ் பெண்மணி ஒருவர் மேல் தீராத ஆசை இருந்து வந்தது.

அந்த தமிழ் பெண்மணி குறித்த அதிகாரியின் வயதை ஒத்தவராக இருந்தாலும் இன்னமும் திருமணமாகமலே இருந்து வந்தார். அவர் அடிக்கடி தனது கடமையின் தேவைகள் நிர்மித்தம் அந்த தலைமையாக அதிகாரியின் சந்தித்து வருவது வழமை. இவ்வாறு அதிகாரியை தொடர்ந்தும் சந்திக்க வாய்ப்பு கிடைத்ததன் நிமித்தம் அந்த இருவருக்கும் இடையில் காதல் மலர்ந்தது முஸ்லீம்கள் எத்தனை திருமணமும் செய்யலாம் என்ற அடிப்படையில் அதிகாரி அந்த தமிழ் பெண் மணியை திருமணம் செய்ய துணிந்து விட்டார்.

அந்த பெண்மணியும் அதிகாரியின் ஆசைக்கு பேரப்பிள்ளைகளை கொஞ்சி குதுகலமாக இருக்கம் வயதிலே, இளசுகள் என கூறமுடியாத அந்த ஜோடிகளுக்கு திருட்டு திருமணம் அப்பகுதி சைவ ஆலயமொன்றில் காதோடு காதுவைத்தால் போல் இனிது நிறைவேறியது.

அந்த அனைத்து நிகழ்ச்சி நிரலின் விடயதானங்கள் முற்று முழுவதற்கும் பொறுப்பாக முன்னின்று, அவை அனைத்தையும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் சென்ற பெருமை குறித்த கிளை பொறுப்பதிகாரி அவர்களயே சாரும்.

இனிமேல் கேட்கவா வேண்டும் அந்த பொறுப்பதிகாரியின் செல்வாக்கை முழுத்தலைமையகமே இன்று அவரின் உள்ளங்கைகளுக்குள் வந்து விட்டது. அவர் புரிந்த காரியம் அசிங்கமானதாக இருந்தாலும் அந்த நிறுவனத்தைப் பொறுத்த அளவில் பொறுப்பதிகாரி தனிக்காட்டு இராஜாவாக மாறிவிட்டார்.

அவரால் மேற்கொண்ட அந்த களங்கமான கைக்காரியத்தினால் அவரின் கட்டுப்பாட்டுக்குள் இயங்கி வந்த குறித்த கிளை நிறுவனம் மிக உச்ச நிலையை அடைந்தது. எந்தவொரு கிளை பொறுப்பதிகாரிகலுக்கும் கிடைக்காத அந்தஸ்த்து கிடைத்தது. பணியாளர்களின் பாராட்டுக்களை அவர் பெறத் தவறவே இல்லை.

அந்த கிளை பொறுப்பதிகாரிக்கு எதிராக, அவர்மேல் விருப்பமில்லாத அன்றைய அனைத்து பணியாளர்களும் ஒரே குடையின் கீழ் இயங்க முன்வந்தனர். [illegible] "ஓகோ" என வளர்ச்சி கண்டது. ஏனைய கிளைகளை சார்ந்தவர்கள் குறித்த கிளையில் பணியாற்ற விருப்பம் முண்டியடித்துக் கொண்டு இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கவும் தவறவில்லை.

நாளுக்கு நாள் அவரின் செல்வாக்கு அதிகாரித்துக் கொண்டே சென்றது. அவரின் சுயநலமும், புகழ் விரும்பிக் கொள்ளைகலுமே அவரின் வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும், முக்கிய காரணிகள் என்பதனை மிக அழுத்தமாக எங்கும் எடுத்துரைக்கப் பட்டன.

என்னவாக இருப்பினும்அவர் ஓய்வு பெறவேண்டிய குறிப்பிட்ட காலம் அவரை அண்மித்திருந்தும் அவர் பதவியை விட்டு அசைய மறுத்தார் அவரின் பதவியை புதிதாக பாரமெடுக்க வந்த கிளை பொறுப்பதிகாரிக்கு அப் பதவியை பாரமளிப்பதில் ஏற்பட்ட பிணக்கில் புதியவர் திடீர் மரணமடைந்தார். பழையவர் கொலைக் குற்றத்திற்கு அஞ்சி அரசியல்வாதியொருவரின் வீட்டில் தஞ்சம் பூண்டதுமல்லாமல் நாட்டை விட்டும் தப்பியோடினார்.

நீதிமன்றத்தில் மருத்துவர்களின் மரண அறிக்கை பழைய பொறுப்பதிகாரிக்கு. சாதமாக இருந்ததால் கொலைக் குற்றத்திலிருந்து அவர் தப்பிக் கொண்டார். இருப்பினும் சமூகம் அவரை கொலையாளியாகவே இன்றும் உற்று நோக்குகிறது. அதன் பின்னும் மனுஷன் அடங்யிருந்தாரா? இல்லவே இல்லை ஆளும் கட்சியிலுள்ள பிரமுகருடன் சேர்ந்து இலக்கிய விழாவொன்றை நடாத்தப்போய் கணக்காய்வு திணைக்களத்திற்கும். வேலைப்பழவை அதிகரிக்கச் செய்தார். அதிலும் ஒருவாறு தப்பிக் கொண்டார்.

## ...நாட்டு நடப்பு...

பதவி ஆசை ஒரு மனிதனை பைத்தியகாரனாக்கிவிடும் என்பதற்கு இவர் நல்லதொரு உதாரணமாக சமூகத்தில் விளங்கினார். வடமாகாண சபை தேர்தல் காலங்களில் அரசியல் கட்சியொன்றுக்கு வக்காளத்து வேண்டி பிரபல தினசரி பத்திரிகைக்கு ஆக்கங்களை எழுதி அள்ளி வீசினார். அத் தேர்தல் முடிவடைந்ததும் பிரதேசத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தில் தலைவராக பதவிபெற எப்படியோ கிளை ஒன்றின் ஊடாக பேராளரானார். ஆனால் அவரது நோக்கம் அங்கு படுதோல்வியடைந்தது. பாடையில் போகும் போதும் பதவியுடன் போக விரும்புவார்களில் இவரும் ஒருவர் ஊரார் பேசிக் கொள்கின்றனர்.

**- துட்டகைமுனு -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை

# மழையின் கொலை...

வானுக்கு பூமியிடம் என்ன கோபமோ தெரியவில்லை. அதிகாலை 3மணிக்கு பெய்யத் தொடங்கிவிட்டது மழை. இடியும் மின்னலும் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்க அந்த சத்தத்தால் வந்த தூக்கமும் பறந்து போனது. தூக்கம் வரவில்லை. பலயோசனைகள் எழ கண்ணை மூடியும் உறங்காது விழித்திருந்தேன்.

அப்போதுதான் ஆற்றோரம் வாழும் லலிதாப் பாட்டியின் ஞாபகம் மூளைக்குள் தட்டியது. ஐயோ அந்தப் பாட்டி பாவம். பெய்த மழைக்கு வெள்ளம் பாறைகளையும் புரட்டிக் கொண்டல்லவா போகும்.

இந்த முறை நிச்சயம் லலிதா பாட்டியின் வீடு வெள்ளத்துக்குள் அகப்பட்டுப்போயிருக்கும். அவளால் ஓடவும் முடியாதே. கடவுளே லலிதா பாட்டியைக் காப்பாற்று என்று கடவுளை வேண்டியவாறு அருகில் படுத்திருந்த அம்மாவைத் தட்டி, அம்மா லலிதா பாட்டி வீடு வெள்ளத்துக்கு அடிப்பட்டு போயிருக்குமே என்று கேட்டேன்.

அம்மாவும் திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தார். அம்மாவால் என்ன செய்ய முடியும். யோசித்துக் கொண்டு இருக்கையில் "ஐயோ ஐயோ லலிதா அம்மா ஆத்துல அடித்துட்டு போகுது வாங்கயா வாங்க" என்று அலறல் சத்தம் கேட்க விடுக்கென்று எழுந்து வெளியில் ஓடினோம்.

சனம் முண்டியடித்துக்கொண்டு ஆற்றுப்பக்கம் ஓட நாங்களும் ஓடினோம். நினைத்தது போலவே வெள்ளமும் பாறைகளை மட்டுமல்ல பாறைபோன்ற மரங்களையும் புரட்டியெடுத்துக்கொண்டு போனது. பாட்டியை ஆற்று வெள்ளத்தில் எப்படி தேடுவது.

விழுந்து தேட நினைப்பவர்களையும் வெள்ளம் இழுத்துக்கொண்டு போய் விடும். 8 அடி உயரமான பாலத்தையும் தொட்டுக்கொண்டு செல்கிறது வெள்ளம். பாட்டியை நினைத்து அழமட்டுமே முடிந்தது. ஊர் பெரியவர்கள் தீப்பந்தத்தைப் பிடித்துக் கொண்டு தேடினார்கள். "கும்" என்ற இருட்டில் மரங்கள் போவது மட்டுமே தெரிந்தது.

3 மணித்தியாலம் நாங்களும் கொட்டும் மழையில் நின்று கொண்டு இருந்தோம். மழை நின்றபாடில்லை. பின் அம்மா என்னை அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். பொழுதும் விடிந்தது, ஊர் முழுவதும் லலிதா பாட்டியைப் பற்றிய பேச்சுதான்.

காலையில் வெள்ளம் கொஞ்சம் குறைந்திருந்தது. ஊரில் உள்ள இளைஞர்கள் எல்லோரும் ஆற்றில் பாய்ந்து தேடத் தொடங்கினார்கள். ஊர் பெரியவர்களும் பொலிஸுக்கு தகவல் கூறி பொலிஸாரும் வந்து விசாரித்தனர்.

லலிதா பாட்டிக்கு யாருமே இல்லை. அவர் முன்பு நன்கு வசதியாய் இருந்திருக்கிறார். அவருக்கு 3 பிள்ளைகள். கணவன் கார் விபத்தில் இறந்து போக இவர் அந்த 3 பிள்ளைகளுக்காகவே தனது வாழ்க்கையை செலவிட்டிருக்கிறார். லலிதா பாட்டி பெரிய படிப்பு படித்தவராம்.

ஊருக்கு யாராவது பெரியவர்கள் வந்துவிட்டால் அவர் மட்டும்தான் ஆங்கிலத்தில் உரையாடுவாராம். நானும் கண்டிருக்கிறேன்.

காதல் திருமணம் செய்துக்



கொண்டதால் அவரை வீட்டிற்குள் வர வேண்டாம் என்று பெற்றோர் கூறிவிட இவர் கணவருடன் இந்த ஊருக்கு வந்திருக்கிறார். ஆற்றோரம் இருந்த சிறுதுண்டு காணியில் குடிசை அமைத்து அதில் வாழ்ந்திருக்கிறார்கள்.

கணவன் வாழும்வரை வறுமையை அறியாத அந்தப் பாட்டி அவர் இறந்த பின் பிள்ளைகளுக்காக கஷ்டப் பட்டுள்ளார். அந்த பிள்ளைகளின் வயிற்றுப் பசியை போக்குவதற்காக தான் வீட்டு வேலைக்குச் சென்றிருக்கிறார்.

அங்கு கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு வந்து பிள்ளைகளுக்கு உணவு கொடுத்துள்ளார். பாட்டி அழகானவர். வயது போயும் கூட அவரது அழகு மங்கவில்லை. கிளிபோல் அழகு. எப்போதும் அவரைப் பார்த்துக் கொண்டே இருக்கச் சொல்லும்.

இளமை பருவத்திலே கணவனை பறிகொடுத்ததால் ஊரில் ஒரு சில ஆண்கள் அவரை அடைவதற்காக நடு சாமத்திலும் அவரது வீட்டைத் தட்டியிருக்கின்றனர்.

பாட்டி அதற்கு உடன்போகாததால் அவரது பெயர் கெடும் அளவிற்கு தகாதவற்றை சொல்லி அவரை கேவலப்படுத்தியிருக்கிறார்கள். வீட்டு வேலைகளுக்குச் சென்று பிள்ளைகளைப் படிக்க வைத்தார் பாட்டி. பிள்ளைகளும் நன்கு படித்து பெரிய இடத்திற்கு வந்துவிட்டார்கள்.

மூத்தவர்கள் இருவரும் ஆண் பிள்ளைகள். அவர்களுக்குத் திருமண வயது வர அவர்களுக்கு விரும்பிய பெண்களைத் திருமணம் செய்து கொண்டு தனி குடித்தனம் போய் விட்டார்கள்.

49 வயதிருக்கும் போது பாட்டியின் இளைய மகள் மட்டுமே பாட்டியுடன் இருந்தாள். அவளை பாட்டி திருமணம் செய்துகொடுப்பதற்கு வரன் பார்த்திருக்கிறாள். 3 வரன் வந்திருக்கிறது. பாட்டியின் மகள் பாட்டியைப் போன்றே அழகு.

வந்தவர்கள் அந்தப் பெண்ணை விரும்பினாலும் ஊரில் சிலர் வந்தவர்களுக்கு நடத்தைக்கெட்ட குடும்பத்தில் சம்பந்தம் வைக்கப்போறீர்களா என்று சொல்லிவிட, வந்த வரன்களும் கூடாமல் போனது.

3 மாப்பிள்ளைகளும் வேண்டாம் என்று சொல்லிவிட திருமணமே வேண்டாம் என்று வாழத் தொடங்கினாள் பாட்டியின் மகள் கீதா. பாட்டியை கண்ணும் கருத்துமாய் பார்த்துக் கொண்டது கீதாதான். மற்ற இரண்டு மகன்மாரும் பாட்டியை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

பாட்டியே தனது பிள்ளைகளை தேடிப்போனப் போதும்கூட வரவேண்டாம் என்று மருமகள் மார் கூறிவிட்டனராம். அவர்கள் கூறியதை மகன்மார்களும் பார்த்துக் கொண்டுதான் இருந்திருக்கிறார்கள். மகன்மார்களை பார்க்காமல் 10 வருடம் கீதாவே கதியென்று வாழ்ந்திருக்கிறார் அந்தப் பாட்டி.

கீதா ஒரு கடையில்தான் வேலை செய்கிறாள். சனி, ஞாயிறு மட்டும்தான் கீதாவிற்கு விடுமுறை. போன வாரம்தான் கீதா பாட்டியை வந்து பார்த்துவிட்டு மருந்து எடுத்துக்கொடுத்து விட்டு சென்றிருக்கிறார். அந்தப் பாட்டிக்கு தனது கடைசி மகளது வாழ்க்கை இப்படி ஆகிவிட்டது என்பதுதான் பெருங்கவலையாய் இருந்துள்ளது.

தான் இறந்தபின் இவளது கதி என்னவாகும் என்று கூறி அழுதும் இருக்கிறார் லலிதா பாட்டி. கீதாவும் லலிதா பாட்டி இல்லாமல் இருக்க மாட்டாள். ஒரு கிழமை கழித்து வந்தால் அந்தத் தாயின் மடியில் சிறிது நேரம் தூங்கிவிட்டுத்தான் மற்றக்கதைகளைப் பகிர்ந்துகொள்வாள் கீதா.

இப்போது அந்தப் பாட்டி வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போனது கீதாவிற்கு தெரியாது.

வந்தால் என்ன செய்யப் போறாளோ தெரியவில்லை என்று ஊராரது சம்பாஷணை போய்க் கொண்டிருந்தது. அப்போது ஆற்றில் இறங்கி தேடியவர்கள் லலிதா பாட்டி கிடைத்திட்டாள் ஐயோ.... என்று தூக்கிக்கொண்டு ஓடி வந்தார்கள்.

முகம் அகோரமாய் இருந்தது. பாட்டியின் பின் தலையில் நன்கு அடிபட்டிருந்தது. இரத்தம் கசிந்துபோய் கிடந்தது.

ஊர் மத்தியில் கிடத்தி வெள்ளைப் போர்வையால் போர்த்து பிரேதத்தை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்கள்.

பிள்ளைக்கு தகவல் சொல்ல ஓர் கூட்டம் விரைந்தது. மாலை 6 மணியிருக்கும் கீதா விடயம் தெரியாமல் வந்தாள். வந்து இறங்கி ஊர் பொது இடத்தில் பிரேதத்தை வைத்திருந்த போதுதான் பார்த்தாள் அவள்.

ஐயோ எனக் கட்டி அணைத்து அழுதவள் என்னையும் உன்னுடன் கூட்டிக்கொண்டுபோயிருந்தால் என்னம்மா என்று கதறியதுதான் ஊரே அழத்தொடங்கியது.

இனி அந்த பிள்ளைக்கு யார் துணை? ஆசைக்கு இரண்டு மக்களைப் பெற்ற அந்த தாய்க்கு கடைசியில் கொள்ளி வைக்கக் கூட ஒருமகன் இல்லாமல் போய்விட்டனர்.

அத்தனை உறவுகள் இருந்தும் ஊராரே அந்தப் பிரேதத்தை அடக்கம் செய்தார்கள். தாயின் ஞாபகமாக கீதாவிற்கு எடுத்துக்கொள்வதற்கு ஒன்றையும் விட்டு வைக்கவில்லை இந்த மழை வெள்ளம்.

லலிதா பாட்டியுடன் சேர்ந்து அவர் இருந்த குடிசையும் வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போய்விட்டது.

அவரை அழைத்து வருவதற்காக, அவர் குடிசையிலிருந்து சிறிது தூரம் தள்ளியிருந்த கோபால் சென்ற போதுதான் குடிசை மழை வெள்ளத்தில் அடித்துக்கொண்டு செல்வதை கண்டுள்ளார்.

"ஐயோ யாராவது வாங்களே என்ற சத்தம் மட்டும் இறுதியாக கேட்டதாக கோபால் சொன்னார். என் வீட்டில் ஏதாவது பாத்திரம் கீழே விழுந்தால் கூட அங்கிருந்து ஓடிவந்து பார்ப்பாங்க.

இப்படி இடி மின்னல் வெட்டியது கூட தெரியாமல் எப்படி தூங்கினாங்களோ தெரியலயே என்று கோபால் அழுதவாறு ஊராருக்கு கூறிக்கொண்டிருந்தார்.

அப்போதுதான் கீதாவிற்கு லலிதா பாட்டிக்கு குழுசைகள் வாங்கிக் கொடுத்தது நினைவுக்கு வந்துள்ளது.

லலிதா பாட்டி ஆஸ்துமா வினால் பீடிக்கப்பட்டிருந்திருக்கிறார். இரவில் நித்திரைக்கொள்வது இல்லையாம்.

அதனால் தான் போனவாரம் கீதா வரும்போது அவருக்கு ஆஸ்துமாவிற்கான மருந்துகளை கேட்டு வாங்கி வந்து கொடுத்திருக்கிறார்.

அதில் இரவில் நிம்மதியாக தூங்குவதற்கு நித்திரையும் குழுசையும் இருந்ததாம். அதனால்தான் லலிதா பாட்டி மழை பெய்ததையும் அறியாது அழமாய் தூங்கிவிட்டிருக்கலாமென்று கூறிய வண்ணம் கதறியழுதாள் கீதா.....

**மாறணி**

# யாரெல்லாம் சோம்பேறிகள்?

ஒரு சமயம் சந்தை கூடுமிடத்தில், ஓர் மேடான இடத்தில் முல்லா நஸ்ருதீன் ஏறி நின்றார். அங்கு கூடியிருந்த மக்களைப் பார்த்தார்.

அனைவருமே அவரவர் கடமையில் இருந்தார்கள். திடீரென்று அவர், "அன்பார்ந்த மக்களே..." என்று பேச்சை ஆரம்பித்தார்.

மக்கள் அனைவரும் அவரைப் பார்த்தனர். சிலர் அவர் அருகில் வந்து அவர் பேச்சைக் கேட்க ஆவலாயினர்.

மீண்டும் முல்லா, "மக்களே... நீங்கள் கஷ்டம் இல்லாமல் சிறந்த அறிவு பெற ஆசைப்படுகிறீர்களா...? பொய்யே



இல்லாத முழு உண்மையை அறிய ஆசைப்படுகிறீர்களா...? முயற்சி சிறிதும் இன்றி முன்னேற ஆசைப்படுகிறீர்களா...?" என்று சத்தமாகக் கேட்டார்.

அங்கு கூடியிருந்த மக்களுக்கு ஒரே உற்சாகம். "ஆமாம்... ஆமாம்... அவற்றிற்கு வழி கூறுங்கள்" என்று உரத்த குரலில் கேட்டனர்.

அதைக் கேட்ட முல்லா அவர்களை எரித்து விடுவது போல் பார்த்தார். வழியாவது மண்ணாங்கட்டி யாவது. சோம்பேறியாக இருந்தால் எப்படி முன்னேற முடியும் என்று யாராவது யோசித்தீர்களா? உங்களில் யாரெல்லாம் சோம்பேறிகள் என்று தெரிந்து கொள்ளத்தான் அப்படி பேசினேன். இப்போது இங்கு நிற்கும் அனைவருமே சோம்பேறிகள் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டேன். போய் உழைத்து வாழுங்கள் என்றார் முல்லா நாஸ்ருதீன்.

அங்கே கூடியிருந்த மக்கள் அனைவரும் முல்லாவைக் கோபத்துடன் பார்த்தபடி நகர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## இழப்புகளின் பெறுமதியில்

உன் உருவத்தை உனக்கே
காட்டிக்கொடுப்பது கண்ணாடி
உன் உள்ளத்தை மற்றவர்களுக்கு
காட்டிக்கொடுப்பது உன் பேச்சு
யாரையும் தேவையில்லாம்
விலக்கி வைக்காதே வேணும்
என்றால் ஒதுக்கி வை
உனக்கு தேவை ஏற்படும்போது
அவர்களே தெய்வமாகவே
தெரியக்கூடும்
எல்லாம் தெரியும் எனக்கு
என்று நினைப்பதும்
எனக்கு தெரிந்த எதுவும்
யாருக்கும் தெரியாது என்று
நினைப்பதுவுமே மிகப் பெரிய
முட்டாள்தனம்
இந்த உலகம் என்பது ஒரு
வகுப்பறை
நேற்று யாரோ இன்று
நாம் நாளை யாரோ
அடுத்தவனின் நிழலில் நின்று
குளிர் காய்வதை விட
தனியாக நின்று கருகிப்
போவதே மேல்
தோல்விகள் மட்டுமே உன்
முயற்சிகளை சோதிக்கும்
உன் முயற்சிகள் மட்டுமே
வெற்றிகளை பெற்றுத்தரும்
இழப்புகளின் பெறுமதியில் எந்த
வெற்றியும் தீர்மானிப்பதில்லை
வெற்றிக்கான விருது அதற்கான
இழப்புகளின் பெறுமதியால்
தீர்மானிக்க படுகிறது மனிதனுக்கு
ஞாபக சத்தி எவ்வளவு
அவசியமோ அவ்வளவு அவசியம்
மறதியும்...

மதுசா

## தாமரை உடுத்திய பகல்

தாமரையை உடுத்திப்
படுத்திருந்த பகலில்
நீள் நகங்களால் வறாண்டி
சபைக் கூச்சத்தில்
முத்தம் உடைத்தவள்
நீயாகத் தானிருக்கும்
நிச்சயமாக........
மௌனத்தை
மதுபானமாய் நிரப்பி
இல்லாத மொழியில்
வசனம் அமைத்து
உன் பூஜையறையில்
எனைப் பூக்களாய்
அடுக்கினேன்
நிலாப் பொந்துகளில்
இரவு பதுங்குகிற
ஒரு நாளில்.....!

அ.ச.பாய்வா
கொட்டியாரம், இலக்கிய மரபு

## ஊமைக் கால்கள்

மறைவுகளின் பின் தோன்றும்
ஊமைக் கால்கள்
நிர்வாண உருவங்கள்
மதில்களின் தொங்கும்
உள்ளாடைகள்
ஆளில்லா வீடுகளென
அப் பேரமைதி
ஊர்ந்து கொண்டிருக்கிறது
அவ் அமைதியின்
வேலிகளுக்குப் பின்னால்
நிராதரவான முகங்கள்
அவற்றை உட்பதிக்க
முற்படும் குறிகள்
பரிணாமங்களை எச்சரிக்கின்றன
அவ் வீடுகளுக்குள் மறைந்த
ஊமைக் கால்களின்
ஒன்றித்த பேரமைதியோடும்
மதில்களில் தொங்கும்
உள்ளாடைகளோடும்

தில்லைநாதன் பவித்ரன்
"குறி இடல்"



## உள்ளம் எனும் புத்தகம்

பிரேம் ராவாட்

**(தொடர்ச்சி)** யார் ஒருவரிடம் தண்ணீர் உள்ளதோ, அவர் விவரணம் செய்ய வேண்டிய அவசியமே இல்லை. தாகத்துடன் ஒருவன் வரும் பொழுது, அவர் போத்தலை திறந்து அவனுக்கு தண்ணீரை கொடுக்கின்றார். அவர்தான் உண்மையான வழிகாட்டி. எண்ணிப் பாருங்கள். உங்களுக்கு உங்களது வாழ்விலே என்ன வேண்டும்? வர்ணணை வேண்டுமா? அல்லது தண்ணீர் வேண்டுமா?

உங்களை ஒருபறவையுடம் ஒப்பிட்டால், பறப்பதற்கு மறக்காதீர்கள். ஏனெனில் பறப்பதில் தான் அந்த பறவையின் சுதந்திரம் உள்ளது. நீங்கள் ஒரு மலர் என்றால் மலர்வதற்கு மறக்காதீர்கள். ஏனெனில் மலர்வதில்தான் பூவின் அழகு உள்ளது. நீங்கள் மிகவும் அழகானவர்கள். ஒழுங்காகசவரம் செய்ததாலோ அல்லது லிப்ஸ்டிக் பூசியதாலோ நீங்கள் அழகாக இருக்கிறீர்கள் என்றுஅல்ல. நீங்கள் அந்த படைத்தவரின் ஒருபடைப்பு என்பதால் அழகாக உள்ளீர்கள்.

ஆனால் நீங்கள் மலர வில்லை என்றால், நீங்கள் இருக்கும் தோட்டத்தின் அழகை அதிகரிக்க மாட்டீர்கள். நீங்கள் மலராவிட்டால்,முற்றம் எவ்வாறு அழகாக உள்ளது என்பதை அறிய மாட்டீர்கள். இந்த அழகு உங்களது முகத்தை பற்றியது அல்ல. உங்களுக்கு வேறும் ஒருமுகம் உள்ளது. அந்த முகத்தில் புன்னகை ஏற்படும் பொழுது மிகவும் அழகாக இருப்பீர்கள். அதனை வர்ணணை செய்ய முடியாது. அந்த அழகை கண்ணாடியில் பார்க்கமுடியாது.

உங்களது உள்ளம் எனும் கண்ணாடியிலே,உங்களைபார்க்கும் பொழுது அந்த அழகை உங்களால் காணமுடியும். உங்களது இந்த முகம் ஒருபொழுதும் முதுமையடையாது.

அதில் ஒருபொழுதும் சுருக்கம் விழாது. உலகத்தில் உள்ளது துன்பங்களால் அதுதாக்கப்படாதது. உலகத்தின் இன்பங்களால் அது சிரிப்பதும் இல்லை. உலகத்தின் துன்பங்களால் அது அழுவதும் இல்லை.

ஏனெனில் உலகத்தில் இன்பமும் துன்பமும்,வரும்,போகும். ஒருவரும் இதிலிருந்து தப்பமுடியாது. பலருக்கு தம்மிடம் உள்ள செல்வத்தையிட்டு கர்வம் உள்ளது. உங்களிடம் உள்ள பணம் உங்களது துன்பத்தை அகற்றும் என நீங்கள் எண்ணினால், அதுதப்பான கருத்தாகும். உங்களது புகழ் உங்களது துன்பத்தை அகற்றும் என நீங்கள் எண்ணினால் அது கூடதவறான கருத்தாகும். துன்பம் உங்களை நன்றாக அறிந்து வைத்துள்ளது.

நீங்கள் எங்கு சென்றாலும்,நேரம் வரும் பொழுது அது உங்களை தேடிக் கண்டுபிடித்து, உங்களது தலையிலே ஏறி உட்கார்ந்து விடும். உங்களது பசி, நித்திரை எல்லாவற்றையும் கெடுத்து விடும். உலகத்திலே இன்பம் கிடைக்கும் பொழுது, அதனுடைய அர்த்தம், துன்பம் ஓய்வெடுத்து தன்னை பல முள்ளதாக்கி கொண்டிருக்கிறது என்பதாகும்.

இன்பத்திலேநாம் துன்பத்தை பற்றி மறந்து விடுகிறோம். "இன்பத்திலே இறைவனைநினைப்பார் இல்லை, ஆனால் துன்பத்திலேநினைப்பார்கள். இன்பத்திலே இறைவனை எண்ணியிருந்தால் துன்பம் எவ்வாறு அணுக முடியும்" எனகபீர் என்ற ஞானி கூறியுள்ளார்.

நீங்கள் இந்த உலகத்திலே உயிர் வாழும் வரை இன்பம், துன்பம் என்ற அலையிலேமேலும் கீழும் ஆடிக் கொண்டு இருப்பீர்கள்.

ஆனால் இன்னும் ஒரு இடம் உள்ளது. அங்கே இந்தஅலைகள் வந்துபோவதில்லை. அங்குஎல்லாம் ஒரே அமைதியாக இருக்கும். உங்களது படகைஅந்த இடத்திற்கு எடுத்துச் சென்றால் வாழ்வு ஆனந்தமாக அமையும்.

முற்றும்.....

# அரங்க விளையாட்டுக்களும் நாடக செயற்பாட்டில் அதன் பங்களிப்பும், முக்கியத்துவமும்.

ஒரு நாடக நடிகருக்கு அவசிய மானவைகளான கற்பனை, அவதானம், புலனுணர்வு, மனவெழுச்சி, தளர்ச்சி நிலை கருத்தூன்றல், சுதந்திர சிந்தனை, சமூகஉணர்வு, உளமுதிர்ச்சி, படைப்பாக்க இன்பம் ஆகியவை விளங்குகின்றன.

இந்த அரங்கவிளையாட்டுக்கள், நாடகத்துறை மாணவர்களுக்கு மட்டுமின்றி ஆரம்பக்கல்வி பாடசாலைகளில் விளையாட்டுடன் இணைந்த கற்றல், கற்பித்தல் முதன்மை பெறுகின்றன சிறுவர்கள் துடிப்பானவர்கள், ஒரு வேலையில் தொடர்ந்தும் ஈடுபட விருப்பம் காட்டமாட்டார்கள், கற்றலைக் கூட ஒரு விளையாட்டாக அறிமுகப்படுத்தும் போது கற்க வேண்டிய விடயங்களை இலகுவில் விளங்கிக்கொள்கின்றனர். அவர்களுடைய ஆளுமை விருத்திக்கு விளையாட்டுக்கள் துணை புரிகின்றன. நட்புறவுடன் மற்றவர்களுடன் பழக வாய்ப்புக்கள் கிடைக்கின்றன.

நாடக பாடத்துடன் இணைந்த விளையாட்டுக்களைத்தவிர மாணவர்களின் திறன்விருத்திக்கான பல விளையாட்டுக்களும் உள்ளன. அவற்றை அவ்வப்போது விளையாடும்போது தசைநார் வளர்ச்சி, மனவளர்ச்சி, சமூகமயமாக்கல், பண்புவளர்ச்சி போன்ற அவசியமான வளர்ச்சிகளைப் பெறுகின்றனர். எல்லாவற்றுக்கும் மேலாக மாணவர்கள் தம்மைச் சுதந்திரமாக வெளிப்படுத்த வாய்ப்புக் கிடைக்கின்றது.

"வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களும் விளையாட்டுக்களில் ஈடுபடுவதால் அனைவரும் உற்சாகமடைவதுடன் நல்ல கற்றற்சூழலும் உருவாகின்றது. ஆசிரிய மாணவ நல்லுறவு வலுவடைகின்றது. இவ்வரங்க விளையாட்டுக்களில் பாரம்பரிய விளையாட்டுக்களும் புதிய கண்டுபிடிப்புக்களும் அடங்குகின்றன" "அரங்க விளையாட்டுக்களாக சிலவற்றை இங்கே குறிப்பிடலாம்.

ஆடும் வீடும், பொண் முட்டை விளையாட்டு, நண்டு இறால் மீன், கண்ணாடி விளையாட்டு, கந்தையாண்ணை சொல்கிறார். சோடியைக் கண்டு பிடித்தல், காகம் உயிர்பெறுதல், இலக்கங்களுக்கு ஒன்று சேர்தல், பழக் கலவை, தலைவரைக்கண்டுபிடி, குரலாட்டம், தண்ணீர் பலூன், இப்போ என்னநேரம், கோழிகோட்டான், சின்னப் பானை பெரியபானை, 7UP, சுக்குப் பக்கு ரயில் போன்ற அரங்க விளையாட்டுக்களைக் குறிப்பிடலாம்.

நாடகத்துறையை எடுத்துக் கொண்டால் மாணவர்கள் பல்வேறு விதமான இறுக்கமான நிலையுடன் வகுப்புகளுக்கு சமூகமளிக்கின்ற நிலையில் அவர்களுடைய இறுக்கமான மனநிலையினைக் களைவதற்கும் இலகுவான அல்லது இலேசானதும் சுதந்திரமானதுமான மனநிலையை ஏற்படுத்துவதற்கும் அரங்க விளையாட்டுக்கள் மிக உகந்தவை.

உதாரணமாக "காகம் உயிர் பெறுதல்" எனும் விளையாட்டானது ஒருவர் துரத்தியடிக்க பலர் ஓடுவார்கள். ஓடுபவர்களில் அடிவாங்கியா காலை அகட்டி, கைகளை உயர்த்தி காகம் போன்ற சிலையாக நிற்கவேண்டும். இவ்வாறு நிற்பவர்களை உயிர்ப்பிக்க வேண்டுமாயின் அடிவாங்காத ஒருவர் சிலையாக நிற்பவரின் காலுக்கு கீழால் சென்று அவரை உயிர்ப்பிக்கலாம். துரத்தியடிப்பவர் எல்லோரையும் காகமாக்கிவிட்டால் வெற்றி பெற்றவராக்க கருதப்படுவார்"



இவ்வரங்க விளையாட்டின் மூலமாக மாணவர்கள் சுதந்திரமாகச் செயற்படும் உணர்வும் மற்றவருக்கு உதவி செய்கின்ற மனப்பான்மையும் வளர்க்கப்படும் தன்மையை அறியக் கூடியதாக உள்ளது.

இவ்வகையில் விளையாட்டுக்கள் மாணவர்களின் தேர்ச்சியினை அதிகரிக்க உதவுகின்றது. அதுமட்டுமல்லாது உடனடியான பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கக்கூடிய செயற்திறனையும் ஏற்படுத்துகின்றது.

மாணவர்களிடையே பிணைப்பையும் நற்பண்புகளையும் முதிர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. ஒன்றிணைந்து செயற்படுவதற்கும் அழகியல் ஆற்றல்களை வளர்த்தெடுப்பதற்கும் எல்லாவற்றிற்கும் மேலாக பிள்ளையை பிள்ளைபோல் செயற்பட வைப்பதற்கும் ஆசிரியர்களுக்கு உதவுகின்றது.

திருமதி. உமா சிறிசங்கர்

அடுத்தவாரம் அரங்கு அசையும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கராத்தே மாஸ்டர் நயன்தாரா



கராத்தே மாஸ்டராக அவதாரம் எடுத்துள்ளார் நயன்தாரா.
ஜெயம் ராஜா மீண்டும் தன் தம்பியை வைத்து ஒரு படம் இயக்கிக் கொண்டிருக்கிறார். பெயரிடப்படாத இப்படத்தில் ஜெயம்ரவி ஹீரோவாக நடிக்க , நயன்தாரா ஹீரோயினாக நடிக்கிறார். மேலும் படத்தில் ஹாக்கி விளையாட்டு வீரராக ஜெயம் ரவி நடிக்கிறாராம். நயன்தாரா கராத்தே மாஸ்டராக நடிக்கிறாராம்.

இவர்கள் இருவரும் பொலிஸ் அதிகாரிகளாகி, வில்லன்களின் சதித்திட்டங்களை எப்படி முறியடிக்கிறார்கள் என்பதை ஆக்ஷன் பொறி பறக்க படத்தில் சொல்கிறார்களாம். இதில் நயன்தாராவுக்கு ஹீரோவுக்கு இணையான வேடம் என்பதால், ஆக்ஷன் காட்சிகளில் ஆச்சர்யப்படும் அளவுக்கு நடித்துக்கொண்டு இருக்கிறா

### சூப்பர்ஸ்டாருடன் மீனா: தமிழுக்கு வருகிறார்



மலையாளத்தில் சூப்பர் ஸ்டார் ஜோடியாக மீனா நடித்த படம் தமிழில் ரீமேக் செய்யப்படுகிறது. மீனா திருமணத்துக்கு பிறகு மலையாளத்தில் மோகன்லால் ஜோடியாக டிரிஷ்யம் என்ற படத்தில் நடித்தார்.

இப்படம் சமீபத்தில் ரிலீசாகி வெற்றி கரமாக ஓடியது. இதை தமிழில் ரீமேக் செய்யும் உரிமையை பெற பலர் போட்டியிட்டனர். இறுதியில் நடிகை ஸ்ரீப்ரியா கணவர் ராஜ்குமார் கைக்கு கிடைத்துள்ளது. இவர் 22 பிமேல் கோட்டயம் என்ற மலையாள படத்தை மாலினி 22 பாளையங்கோட்டை என்ற பெயரில் தமிழில் ரீமேக் செய்து வருகிறார்.

## மோகன்லால் பர்ஸ்ட் விஜய் நெக்ஸ்ட்!



"ஜில்லா" பட டைட்டிலில் மோகன்லால் பெயரை போடுமாறு விட்டுக்கொடுத்துள்ளாராம் விஜய், மோகன்லால் இணைந்து நடித்துள்ள "ஜில்லா" படப்பிடிப்பை நடத்தி, படத்தையும் முடித்துவிட்டார் இயக்குனர் ஆர்.டி.நேசன். இப்போது டைட்டில் போடும் நேரத்தில், அவர் முன்னரே எதிர்பார்த்த அந்த தர்மசங்கடமான சூழ்நிலை வந்துவிட்டது. விஜய் தமிழ்நாட்டில் நம்பர் ஒன் இடத்தில் இருப்பவர். மோகன்லாலோ 35 வருட காலமாக மலையாள சினிமாவின் எவர்கிரீன் ஹீரோ.

முழுப்படத்தையும் இயக்கி முடித்துவிட்ட இயக்குனர் ஆர்.டி.நேசனுக்கு டைட்டிலில் யார் பெயரை முதலில் போடுவது என்பதில் குழப்பம். ஆனால் இயக்குனரின் மனப்போராட்டத்தை புரிந்துகொண்டு, விஜய்யின் பெயரைத்தான் முதலில் போடவேண்டும் என இயக்குனரிடம் முன்பே சொல்லிவிட்டார் மோகன்லால். ஆனால் விஜய்யோ, மோகன்லாலின் சீனியாரிட்டிக்கு மரியாதை கொடுக்கும் விதமாக, டைட்டிலில் மோகன்லால் பெயர்தான் முதலில் வரவேண்டும் என்று உறுதியாகச் சொல்லிவிட ஒருவழியாக நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்கிறார் இயக்குனர் நேசன்.

### மீண்டும் ரம்பா சார்



மீண்டும் சினிமா உலகில் கால்தடம் பதிக்க வருகிறார் ரம்பா.ஒரு காலத்தில் தனது நடிப்பாலும், அழகாலும் ரசிகர்களின் தூக்கத்தை கெடுத்து கனவு தேவதையாக வலம் வந்தவர் ரம்பா.திருமணத்திற்கு பின்னர் கணவர் மற்றும் குழந்தையுடன் வெளிநாட்டில் செட்டிலாகி குடும்பம் நடத்திக் கொண்டிருந்த அவரை, மீண்டும் நடிக்க பலர் முயற்சி செய்தும் நோ சொல்லி தட்டிக் கழித்தவர், தற்போது ஓகே என்றிருக்கிறாராம்.

மனசுக்கு பிடித்தமான தொழில், நல்ல சம்பளம் கொடுத்தால் யார்தான் வேண்டாம் என்பார்கள் அதனால்தான் நடிக்க சம்மதம் சொன்னேன் என்கிறார் ரம்பா. வெளிநாட்டிலிருந்து இந்தியா வந்ததும் அடுத்த ரவுண்டை ஆரம்பிக்க இருக்கிறார்.இந்த தகவல் தெரிந்த சினிமா இயக்குனர்கள், ஹீரோ-ஹீரோயின்களுக்கு அழகான அக்கா அல்லது அண்ணி கதாபாத்திரங்களில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்ய முடிவு செய்திருக்கிறார்களாம்.

### புலிகளுடன் முத்தழகு



புலிகளுடன் புகைப் படம் எடுத்து அதனை பேஸ் புக்கில் வெளியிட்டுள்ளார் முத்தழகு. நடிகை ப்ரியாமணி புத்தாண்டை கொண்டாடுவதற்காக குடும்பத்தினரோடு பாங்காக் சென்றுள்ளார்.

அங்கு புலிகள் கோவிலுக்கு சென்ற இவர் புலிகளுடன் புகைப்படம் எடுத்துள்ளார். அதில், ஒரு படத்தில் பிரியாமணியின் மடியில் தலை வைத்துப்படுத்திருக்கிறது ஒரு புலி. மற்றொரு படத்தில் புலியை வருடிக் கொடுத்தவாறு போஸ் தந்துள்ளார். பொதுவாகவே பிராணிகள் நலனில் அக்கறைக் கொண்ட இவர், அங்கு சுதந்திரமாகச் சுற்றித் திரிந்த புலிகளுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டுள்ளார்.

### மலையாளத்தில் சந்தானம்



மலையாள திரையுலகில் கால்பதிக்கிறார் கொமடியன் சந்தானம். தமிழில் வருடத்திற்கு பல ஹிட் படங்களை கொடுத்து டாப் கியரில் உள்ளார் சந்தானம்.

இந் நிலையில் மலையாளத்திலும் தனது கேரியரை தொடங்க உள்ளார். மலையாளத்தில் நஸ்ரியா நசீம் - துல்கர் சல்மான் நடிப்பில் உருவாகி இருக்கும் "சலால மொபைல்ஸ்". மல்வுட் உலகில் நடிக்கும் முதல் படமான இது வரும் ஜனவரி 23ம் திகதி திரைக்கு வர

## இளவரசனுடன் தமன்னா

முதல் முறையாக மகேஷ் பாபுவுடன் ஜோடி சேர்கிறார் தமன்னா. தெலுங்கு சினிமாவில் மகேஷ் பாபு தற்போது நடித்து வரும் படம் அக்கடு. இதில் பொலிஸ் அதிகாரியாக நடிக்கும் மகேஷ் பாபுவுடன் ஜோடி சேருகிறார் தமன்னா.

சீனு வைட்லா இயக்கும் இப்படத்திற்காக பல லட்ச 'ரூபாய் செலவில் மிகப் பெரிய செட் ஒன்றை அமைத்து, இப்போது அதில் படப்பிடிப்பை நடத்தி வருகிறார்கள்.இந்தப் படத்திற்கு எஸ்.தமன் இசை அமைக்க, தமிழ்நாட்டின் செல்லம் பிரகாஷ்ராஜு"ம் முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் நடிக்கிறார்.



# சினிமுரசு

## 2013 வசூல் படங்கள்

| | |
|---|---|
| ரேஸ் 2 | ரூ 100 கோடி |
| பாக் மில்கா பாக் | ரூ 103 கோடி |
| ராஞ்ஹான | ரூ 100 கோடி |
| சென்னை எக்ஸ்பிரஸ் | ரூ 200 கோடி |
| யே ஜவானி ஹை தீவானி | ரூ 189 கோடி |
| க்ரிஷ் 3 | ரூ 200 கோடி |
| ராம் லீலா | ரூ 100 கோடி |
| விஸ்வரூபம் | ரூ 100 கோடி |
| கிராண்ட் மஸ்தி | ரூ 100 கோடி |
| ஆஷிகி 2 | ரூ 100 கோடி |
| ஆரம்பம் | ரூ 100 கோடி |

## 2013 எதிர்பார்ப்பை நிறைவேற்றாத படங்கள்

கடல்:- கவுதம்-துளசி, இரண்டாம் உலகம்: ஆர்யா-அனுஷ்கா, நய்யாண்டி:- தனுஷ்-நஸ்ரியா, தலைவா:- விஜய்-அமலாப்பால்.

## 2013 ஜெலித்த புதுமுகங்கள்

### கவுதம் கார்த்திக்



கவுதம் கார்த்திக் 2013ம் ஆண்டில் அறிமுகமான ஹிரோக்களில் முக்கியமானவர் கார்த்திக்கின் மகன் கவுதம் கடல் என்ற படத்தில் அறிமுகமானார்

### ஹீரோயின்கள்



ஹீரோயின்கள் புது ஹீரோயின்களில் மலையாளத்திலிருந்து தமிழுக்கு வந்த நஸ்ரியா, ராதா மகள் துளசி, நிவேதா தாமஸ், மிருத்திகா, சுரபி ஆகியோர் ஓரளவு பளிச்சென்று அடுத்த கட்டத்துக்கு சென்றிருக்ளளகிறார்கள்.

## சமந்தாவுக்கு இயக்குனர் சப்போர்ட்



சமந்தாவுக்கு ஆதரவாக டோலிவுட் இயக்குனர் சேகர் கம்முலா கருத்து தெரிவித்திருப்பது புது பிரச்னையை எழுப்பி உள்ளது. டோலிவுட் ஹீரோ மகேஷ்பாபு நடித்துள்ள படம் நேனொகடய்னே. சமீபத்தில் இப்படத்தின் போஸ்ட்டர் ஆந்திரா முழுவதும் ஒட்டப்பட்டிருந்தது. அதில் கடற்கரையில் மகேஷ் பாபு நடந்து செல்ல அவர் பின்னால் நாய் போல் மண்டியிட்டு ஹீரோயின் கிரித்தி சனான் செல்வதுபோல் சித்தரிக்கப்பட்டிருந்தது.

இதற்கு சமந்தா எதிர்ப்பு தெரிவித்து டுவிட்டரில் கருத்து வெளியிட்டிருந்தார். இதற்கு மகேஷ் பாபு ரசிகர்கள் கடுமையாக ஆட்சேபம் தெரிவித்தனர். இந்நிலையில் சமந்தாவுக்கு சித்தார்த் ஆதரவு தெரிவித்தார். கோபம் அடைந்த மகேஷ் பாபு ரசிகர்கள் சமந்தா, சித்தார்த் இருவரும் சினிமாவிலிருந்து வெளியேறுங்கள் என்று கடுமையாக விமர்சித்திருந்தனர். தற்போது ஹேப்பி டேஸ் உள்பட பல படங்களை இயக்கிய டோலிவுட் இயக்குனர் சேகர் கம்முலா சமந்தாவுக்கு ஆதரவாக நேற்று இணைய தளத்தில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மகேஷ்பாபு பட போஸ்டரை பார்த்தேன். அதுபற்றி சமந்தா கருத்தையும் படித்தேன். சமந்தா என்ன கருத்து வெளியிட்டிருந்தாரோ அதுதான் என் கருத்தும். இதற்குபோய் எதற்காக சமந்தாவுக்கு எதிராக கண்டனம் வருகிறது என்று புரியவில்லை. மேலும் கருத்து சொல்ல எல்லாருக்கும் உரிமை உண்டு. எந்த வகையிலும் இது மகேஷ் பாபுக்கு எதிரானதல்ல. ஒரு பெண் போஸ்டரில் கேவலமாக சித்தரிக்கப்பட்டதற்குத்தான் அவர் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளார். இதனால் 2 நாளாக ஓய்ந்திருந்த இப்பிரச்னை மீண்டும் பரபரப்பாகி இருக்கிறது. இயக்குனருக்கு எதிராக ரசிகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## பெர்லினில் "நிமிர்ந்து நில்"

ஜெயம் ரவி நடித்துள்ள நிமிர்ந்து நில் படம் பெர்லின் சர்வதேச பட விழாவில் பங்கேற்கிறது. சமுத்திரக்கனி இயக்கத்தில் ஜெயம் ரவி, அமலாபால் நடித்துள்ள திரைப்படம் நிமிர்ந்து நில். இப்படம் விரைவில் திரைக்கு வர இருக்கிறது. இந்நிலையில் இந்தப் படம் பிப்ரவரி 14 ம் திகதி தொடங்கும் பெர்லின் சர்வதேச பட விழாவில் கலந்து கொள்கிறது.



இதனை ஜெயம்ரவி வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.அவர் தனது வாழ்த்துச் செய்தியில், "அனைவருக்கும் எனது மனமார்ந்த புத்தாண்டு வாழ்த்துகள். இந்தப் புத்தாண்டு எனக்கு இனிமையாக அமையப் போகிறது. நிமிர்ந்து நில் என்னுடைய வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு படம். அந்த படத்தின் தரத்துக்கு ஏற்பபடத்துக்கு இத்தகைய அங்கிகாரமும், பாராட்டும் கிடைத்து இருப்பது மகிழ்ச்சி தருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

## மைனாவுடன் சிவகார்த்திகேயன்?



இப்படத்தில் இவருக்கு ஜோடியாக அமலாபால் நடிக்கிறாராம். ஹன்சிகாவுடன் மான் கராத்தே படத்தில் நடித்துக் கொண்டிருக்கும் சிவகார்த்திகேயன், மீண்டும் முன்னணி நடிகையான அமலாபாலுடன் ஜோடி சேர்ந்துள்ளது அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இப்படம் முழுக்க முழுக்க ஆக்சனை மையமாக வைத்து எடுக்கப்படுகிறது.

இப்படத்தில் சிவகார்த்திகேயன் பொலிஸ் வேடத்தில் வருகிறாராம். இப்படத்தில் நடைபெறும் ஒரு சண்டைக் காட்சிக்காக குங்பூ என்ற தற்காப்பு கலையை கற்றுக் கொள்ள இருக்கிறாராம். வில்லன் ஒரு குங்பூ வீரன் என்பதால் அவருடன் சண்டை போடுவதற்காக இந்த பயிற்சியை பெறுகிறாராம். இந்த படத்தையும் நடிகர் தனுஷின் வுண்டர்பார் பிலிம்ஸ் நிறுவனமே தயாரிக்கிறது. அனிருத் இசையமைக்கிறார்.

## அவுஸ்திரேலியாவில் அனோஷ்காவுடன் அஜித்!

அவுஸ்திரேலியாவில் அனோஷ்காவின் பிறந்தநாளை கொண்டாடுகிறாராம் அஜித். கிறிஸ்துமஸ் பண்டிகையை முடித்த கையோடு ஷாலினி, மகள் அனோஷ்காவோடு அவுஸ்திரேலியாவுக்கு பறந்துவிட்டார் அஜித். அவுஸ்திரேலியாவில் தான் புதுவருட ஆரம்பத்தையும் தனது மகளின் பிறந்தநாளையும் கொண்டாட இருக்கிறாராம்



அங்கு சென்றதுமே சிட்னியில் இருந்து வெலிங்டன் வரையிலான கடல் பயணத்தில் தன்னை இணைத்துக்கொண்டும் விட்டார். இந்தக் கடல் பயணத்தின்போது கப்பலிலேயே புது வருடத்தையும் தனது மகளின் பிறந்தநாளையும் கொண்டாடதிட்டமிட்டுள்ளார் அஜித். புத்தாண்டு மற்றும் தனது மகளின் பிறந்தநாள் இரண்டையும் கொண்டாடிவிட்டு ஜனவரி 9ம் திகதி சென்னைக்கு திரும்புகிறார். அதற்கு மறுநாள் தான் "வீரம்" ரிலீஸாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனியின் நினைவகமாக RAMயை சிறந்த நிலையில் பாதுகாக்க உதவும் மென்பொருள்



கணனியின் செயற்பாட்டில் பிரதான நினைவகமானது மிகவும் முக்கிய பங்கு வகிக்கின்றது. தொடர்ச்சியாக பல நாட்கள் இயங்கும்போது அதன் செயற்பாட்டில் மந்த நிலை ஏற்படுகின்றது.

இதனை சரிசெய்வதற்கு Max RAM Optimizer எனும் மென்பொருள் பெரிதும் உதவியாக இருக்கின்றது. விண்டோஸ் இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இம்மென்பொருள் மூலம் சீரான கால இடைவெளியில் பிரதான நினைவகத்தினை சரிபார்க்கக்கூடியதாக இருக்கின்றது

## HTC-ன் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி



Desire 400 எனும் இரட்டை சிம் வசதி கொண்ட புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசி ஒன்றினை HTC அறிமுகம் செய்துள்ளது.

4.3 அங்குல அளவு மற்றும் 800 x 480 Pixel Resolution உடைய WVGA தொடுதிரை யினைக் கொண்ட இக்கைப்பேசியானது 1.2 GHz வேகத்தில் செயற்படக்கூடிய Processor, பிரதான நினைவகமாக 1 GB RAM ஆகியவற்றினையும் கொண்டுள்ளது.

இவை தவிர 8 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமெரா, 1.6 மெகாபிக்சல்களை உடைய துணையான கமெரா என்பவற்றினையும் உள்ளடக்கியுள்ளது. Android Jelly Bean இயங்குதளத்தினைக் கொண்ட இக்கைப்பேசியில் 4GB சேமிப்பு நினைவகம் தரப்பட்டுள்ளது.

## அன்ரோயிட் ஸ்மார்ட் கைப்பேசியை அறிமுகப்படுத்தும் HP

முன்னணி கணனி வடிவமைப்பு நிறுவனங்களுள் ஒன்றான HP ஆனது கூகுளின் அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்ட ஸ்மார்ட் கைப்பேசியினை அறிமுகம் செய்யவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 6 அங்குலம் அல்லது 7 அங்குல அளவுடைய இக்கைப்பேசியினை சீனா மற்றும் இந்திய போன்ற சில நாடுகளில் மட்டும் விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இவற்றின் குறைந்தபட்ட பெறுமதியானது 250 டொலர்கள் வரையில் காணப்படலாம் என ஊகம் வெளியிடப்பட்டுள்ளது.

# விளையாட்டுப் பையன்

## Samsung Galaxy S5 தொடர்பான புதியு தகவல் வெளியானது



சிறந்த தொழில்நுட்பத்தினைக் கொண்ட அன்ரோயிட் ஸ்மார்ட் கைப்பேசிகளை உருவாக்கி அறிமுகப் படுத்துமம் சம்சுங் நிறுவனமானது தற்போது Galaxy S5 என்ற ஸ்மார்ட் கைப்பேசி உற்பத்தியில் மும்முரமாக இறங்கியுள்ளது. ஏற்கணவே Galaxy S4 வெளியாகி விற்பனையில் அசத்திக்கொண்டிருக்கும் நிலையில் இப்புதிய கைப்பேசியும் மக்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படத்தியுள்ளது.

சம்சுங் நிறுவனமும் அவ்வப்போது சில தகவல்களை வெளியிட்டு எதிர்பார்ப்பினை மேலும் அதிகரித்துவருகின்றது.

இக்கைப்பேசியின் திரையானது 5.25 அங்குல அளவுடையதாகவும், 2560 x 1440 Pixel Resolution உடையதாகவும் இருப்பதுடன் LCD தொழில்நுட்பத்தினைக் கொண்டது என மற்றுமொரு தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இது தவிர Snapdragon 800/805 அல்லது 64-bit Exynos 6 Processor> 4GB RAM என்பன வற்றுடன் கூகுளின் Android 4.4 KitKat இயங்குதளத்தினைக் கொண்டு வெளிவரவுள்ளது.

## புத்தம் புதிய அம்சங்களுடன் அறிமுகமாக காத்திருக்கும் நெக்ஸஸ் 5

கூகுள் நிறுவனம் தயாரித்து அறிமுகப்படுத்தவுள்ள நெக்ஸஸ் 5 சாதனத்தில் பல்வேறு புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. கூகுளின் பிந்திய அன்ரோயிட் பதிப்பான Android 4.4 KitKat இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட இச்சாதனம் 3.2GHz வேகத்தில் செயற்படக்கூடிய Octa-Core Snapdragon Processor, பிரதான நினைவகமாக 6GB RAM ஆகியவற்றினைக் கொண்டுள்ளன. மேலும் 6.5 அங்குல தொடுதிரை, 6,500 mAh, 16GB சேமிப்பு நினைவகம் ஆகியவற்றினையும் உள்ளடக்கிய இச்சாதனத்தின் விலையானது 400 யூரோக்கள் ஆகும்புதிய அம்சங்களுடன் அறிமுகமாக காத்திருக்கும் நெக்ஸஸ் 5

## ஒரே நேரத்தில் பல மொபைல்களை சார்ஜ் செய்யும் சாதனம்



டேப்லட், ஸ்மார்ட் கைப்பேசிகள் போன்ற ஒன்றிற்கு மேற்பட்ட சாதனங்களை ஒரே நேரத்தில் சார்ஜ் செய்யக்கூடிய சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Octafire எனப்படும் இச்சாதனம் 100-240V, 47-63Hz மின்சாரத்தில் செயற்படக்கூடியதாகவும், 2.1A / 5V வெளியிடக்கூடியதாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் அதிகபட்சமாக 8 வெவ்வேறு வகையான மொபைல்களை சார்ஜ் செய்ய முடியும்.

# ஒரு கொலையின் கதை

36 (மாயன்)



**"அவர் ஒரு நல்ல அண்ணா...நல்லா ஜோக் அடிப்பார்... நல்லாப் பழகுவார்... நல்ல கிறிக்கெட்டர்..."**

'ஓகே... சொல்லுங்கோ.... கொலை நடந்த அண்டு என்ன நடந்தது...."

"அண்டு நான், எண்ட பிரண்ட அதாவது கேதீஸ் அண்ணாட மனிசியின் தம்பிய தொடருந்துக்கு கூட்டிக்கொண்டு போய் விட்டுட்டு வந்தனான்."

அதற்கு மேல் அவருக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் போல இருந்தது. புலனாய்வாளர்கள் அதனைப் புரிந்து கொண்டு தண்ணீர் குவளையையும் கண்ணாடிக் கோப்பையையும் அவ்விளைஞனுக்கு முன் நகர்த்தினார்கள்.

தண்ணீரைக் கண்ணாடிக் குவளைக்குள் ஊற்றி அருந்தும் மட்டும் சில மணித்துளிகளை அவ்விளைஞன் செலவழிக்கட்டும் என அவர்கள் வேறு விடயங்களைப் பற்றித் தம்மிடையே கொஞ்சம் சத்தமாக பேசிக்கொண்டார்கள். அமைதியாகச் பேசினால் அந்த இளைஞன் மேலும் அசௌகரியமாக உணர்வார் என்பதாலேயே அவ்வாறு அவர்கள் சத்தமாகப் பேசிக் கொண்டார்கள்.

மிடறு விழுங்கயி பின்னர் அவ்விளைஞன் தொடர்ந்து பேசத் தொடங்கினான். அன்றைய தினத்தில் தான் புதியவன் ஒருவனை அந்தத் தெருவில் கண்டதைப் பற்றி.... அந்தப் புதியவனின் நிறம் மற்றும் குணாதிசயங்களைப் பற்றி... அவனை ஒரு கள்வனாக அக்கணத்தில் உணர்ந்ததைப் பற்றி.......அவன் தொடர்பாக தான் கேதீஸையும் அவரது மாமியாரின் குடும்பத்தையும் உசாரடையச் செய்ய எண்ணியிருந்ததைப் பற்றி..... எனினும் கேதீசுடன் கதைத்துக் கொண்டிருந்த சந்தோசக் கணங்களில் அவ்வாறு தன்னால் அவர்களை உசார்ப்படுத்த முடியாத போனது பற்றி....... அதன் பின்னர் நடந்த கொலை பற்றியும் கொலை செய்யப்பட்ட நிலையில் கிடந்த கேதீஸின் உடலத்தின் நிலை மற்றும் அங்கு குழுமியிருந்தவர்கள் பற்றி..... அந்தப் புதியவன் மீது தான் கொண்ட சந்தேகம் பற்றி.... அந்த இளைஞன் தனது வாக்குமூலத்தை முடித்துக் கொண்டு போது மணிக் கூட்டின் பெரிய முள் ஒரு முழுச் சுழற்சியை முடித்திருந்தது.

"கேதீஸின் கொலையோடு வேறு யாரெல்லாம் சம்பந்தப் பட்டிருக்கலாம்??" என்ற கேள்விக்கு அவரைக் கொலை செய்யும் அளவிற்கு வேறு யாருக்கும் அவர் விரோதியல்ல.... என அந்த இளைஞன் பதிலளித்தான்.

அந்த பதிலிற் சில விடயங்கள் தொக்கி நிற்பதை அவனும்... அவர்களும் உணர்ந்து கொண்டார்கள்.

"சிரி... உங்களுக்குத் தெரிஞ்சத எல்லாம் சொல்லீட்டிங்கள் எண்டு நினைக்கிறம்" ...... "ஓம்... சேர்" .... "வேறு ஏதும் ஞாபகம் வந்தா சொல்லுறன் ....சேர்"

"ஓ.கே. .... அந்த இரவில் சந்திச்சவன இன்னும் ஞாபகம் இருக்கா?.." .... " இருக்கு சேர்... நான் அவனக் கண்டு பயந்தும் போனன்"

" நல்லது.. அவனைத் திரும்பவும் நீங்கள் காண வேண்டியிருக்கும் எங்களுக்கு அவனைக் காட்ட வேண்டியும் இருக்கும்.... இப்ப நீங்கள் போகலாம்......"

ஒரு பெரும் ஆசுவாசப் பெருமூச்சுடன் மிகச் சாவதானமாக அந்த இளைஞன் தனது ஆசனத்திலிருந்து மெதுவாக எழும்பிச் சென்றான்... அக் கணத்தில் அவர்களிடையே மெதுவான நட்புப் புன்னகையொன்று பரிமாற்ற லானது.

தற்போது புலனாய்வாளர்களிடம் மூன்று அடையாளம் காட்டிகள் இருந்தனர். அவர்களில் ஒருவருக்கு சந்தேக நபர்கள் இருவரையும் தெரிந்திருந்தது. மற்றைய இருவருக்கும் ஒருவனை மட்டுமே தெரிந்திருந்தது.

அடையாள அணிவகுப்பிற்கு அம்மூவரின் அடையாளம் காண்தலும் போதுமானதாக இருந்தது. எனவே புலனாய்வாளர்கள் அடையாள அணிவகுப்பைத் திடசித்தத்துடன் எதிர்கொள்ளத் தயாராகினர்.

பொதுவாக அடையாள அணிவகுப்பென்பது எவ்வாறு நடைபெறும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

அடையாளம் காணப்பட வேண்டியவர்களின் எ்ண்ணிக்கைக்கு விகித கமமாக வேறு நபர்களும் அந்த அடையாள அணிவகுப்பில் சேர்க்கப்பட்டிருப்பர். இலங்கையின் சட்ட விதிகளின் படி அடையாள அணிவகுப்பில் உள்ளடக்கப்படும் சந்தேக நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒரு சந்தேக நபருக்கு எழுவர் என்ற அடிப்படையில் அடையாள அணிவகுப்பின் போது நிறுத்தப்படுவர்.

அடையாள அணிவகுப்பானது நீதிமன்றின் திறந்த மன்றில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருடன் மட்டுமே நடாத்தப்படும்.

பொதுவாக நீதிமன்றத்தின் மொழிபெயர்ப்பாளர், தட்டச்சாளர், காவல்துறை உத்தியோகத்தர், நீதிமன்ற ஊழியர் ஆகியோருடன் சந்தேக நபர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளும் அங்கு அனுமதிக்கப் படுவர்.

அடையாளம் காட்டுபவர்கள் அடையாள அணிவகுப்பின் போது மட்டுமே அடையாளம் காண்பவரை காணமுடியும். அதற்கு முன் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவ்விரு தரப்பினரும் சந்திக்க முடிவதில்லை.

அத்துடன் அடையாளம் காண்பவர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர் களாயின் அடையாள அணிவகுப்பில் உருவர் அடையாளம் காட்டிச் சென்ற பின்னர் சந்தேக நபர்கள் தமது இடங்களை, ஆடைகளை, அணிகலன்களை மாற்றிக்கொள்ள அனுமதிக்கப்படுவர்.

அதாவது அடுத்த அடையாளம் காண்பவர். மதலாவது அடையாளம் காண்பவரிடம் பேசி சந்தேக நபர் எங்கு எப்படி, எந்த நிலையில் உள்ளார எனத் தெரிந்த கொண்டு அடையாள அணிவகுப்பிற்கு வந்தாலும் அவருக்கு உண்மையாகச் சந்தக நபரைத் தெரிந்தாலன்றி அடையாளம் காணமுடியாதவாறு அவர் ஆடை, அணிகலன் மற்றும் நிற்கும் இடங்களில் இருந்து மாறியிருப்பார்.

எனவே சரியான சந்தேக நபரை அடையாளம் கண்டு......... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நேபாள அணியை வீழ்த்தியது இந்தியா



ஜூனியர் ஆசிய கிண்ண தொடரின் லீக் போட்டியில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் நேபாள அணியை வீழ்த்தியது. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம், நேபாளம், ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரசு எமிரேட்ஸ், மலேசியா அணிகள் மோதும் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடக்கிறது.

துபாயில் 29.12.2013 நடந்த லீக் போட்டியில் இந்திய அணி நேபாளத்தை எதிர்த்து விளையாடியது. முத்லில் துடுப்பெடுத்தாடிய நேபாளம் 44.4 ஓவரில் 136 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இந்திய தரப்பில் சிறப்பாக பந்துவீசிய குல்தீப் யாதவ் 5 விக்கெட் வீழ்த்தினார்.137 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் களமிறங்கிய இந்திய ஜூனியர்கள் அதிரடியாக ஓட்டங்களை குவித்தனர்.

தொடக்க ஆட்டக்காரர்களான ஹெர்வத்கர், ஜோல் இருவருமே அரைசதம் அடித்தனர். வெற்றி இலக்கை நெருங்கும் நிலையில் ஹெர்வத்கர் (71) ஆட்டமிழந்தார். இறுதியில் இந்திய அணி 25.1 ஓவரில் 1 விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. சிறப்பாக ஆடிய ஜோல் 61 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். முன்னதாக, முதல் லீக் போட்டியில் இந்தியா 189 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை வென்றது. இதன் மூலம் இந்திய அணி அரை இறுதிக்கு முன்னேறும் வாய்ப்பு உறுதியாகி உள்ளது.வரும் 31ம் திகதி இந்தியா தனது கடைசி லீக் போட்டியில் பாகிஸ்தானை சந்திக்கிறது. அரை இறுதி போட்டிகள் வரும் 2ம் திகதியும், இறுதிப்போட்டி 4ம் திகதியும் நடக்க உள்ளது.




# இருபதுக்கு இருபது கடினப்பந்து கிரிக்கெட் போட்டி

இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கிடையிலான சினேக பூர்வ, இருபதுக்கு இருபது கடினப்பந்து கிரிக்கெட் போட்டி அண்மையில் காரை தீவு பொது மைதானத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் சம்மாந்தறை ஆருகுழு இளைஞர் கழகமும் காரை தீவு ஜொலி கிங்ஸ் விளையாட்டு கழகமும் மோதிக் கொண்டன.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய காரை தீவு ஜொலி கிங்ஸ் கழகம் 18 ஓவர் முடிவில் சகல விக்கட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. 120 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சம்மாந்தறை ஆருகுழு இழைஞர் விளையாட்டு கழகம் 16.4 ஓவர் முடிவில் 4 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து போட்டியில் வெற்றி பெற்றது

# சோட்டாக்கன் கராத்தே கழகத்தின் ஏற்பாட்டில் சாதனையாளர்கள் கௌரவிப்பு



மட்டக்களப்பில் இயங்கிவரும் சோட்டாக்கன் கராத்தே கழகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் சாதனைபுரிந்த சாதனையாளர்களை கௌரவிக்குமுகமாக ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வானது கழகத்தின் தலைவர் கே.பாஸ்கரன் தலைமையில் 29.12.2013 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்/வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையின் மண்டபத்தில் மிகவும் சிறப்புற நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக முன்னால் கிழக்கு மாகாண முதலமைச்சரும் ஜனாதிபதி ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து சிறப்பித்ததுடன் மேலும் நிகழ்வில் கிழக்குமாகாண விளையாட்டுத்துறை மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர் அமலநாதன், மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸ் ,கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர் தர்மரெட்ணம், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் நெடுஞ் செழியன், வலய கல்வி பணிப்பாளர் திருமதி சுபா சக்கரவர்த்தி ஆகியோரும் அதிதிகளாக கலந்து சிறப்பித்தார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சர்வதேச மற்றும் தேசிய மட்ட போட்டிகளில் கலந்துகொண்டு பல் வேறுபட்ட துறைகளிலும் சாதனைபுரிந்த மாணவர்கள் மற்றும் சாதனையாளர்களும் அதிதிகளால் நினைவு சின்னங்களும் சான்றிதள்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன்,கராத்தே கலையில் சாதனையாளர்களும்,பயிற்றுவிப்பாளர்களும் அதிதிகளால் கௌரவிக்கப்பட்டார்கள்.போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் வென்றது.

# ஒலிம்பிக் பதக்கமொன்றுக்கு 10 மில்லியன் ரூபா



இலங்கையர் யாராவது ஒலிம்பிக்கில் பதக்கமொன்றை வென்றால் 10 மில்லியன் ரூபா சன்மானம் அளித்து கௌரவிக்கப்படுவார் என இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். அவ்வாறே ஆசியப் போட்டிகளில் அடையும் வெற்றிகளுக்கு 4 மில்லியன் சன்மானம் வழங்கப் படவுள்ளது.

# ஜெயம் பாலகம்
## குறுக்கெழுத்து புதிர்



**இடமிருந்து வலமாக**

1.பஞ்ச தந்திர கதைகளை எழுதியவர்
2.எத்தனம் என்றும் பொருள் படும்
5.பெரியோர் இதனை அடக்க சொல்லுவர்
6. காடு என்றும் பொருள் படும்.
7. பாராட்டத்தக்கது இதன் தத்த கருத்து
8. உள்ளத்தில் கோபம் இந்தால் உதட்டில் தெரிவது
9. விநாயகர் அகற்றுவது
11. அரசவை அமைச்சரை இப்படியும் அழைப்பர்.
13. விழுது விட்டு வளரும் மரம் (குழம்பியுள்ளது)
14. சோழருடைய தலைமைக்காரிய நிருவாகி
16. ஹிட்லரின் நாசகார படையணி.
18. அகரம் இப்போ............ஆச்சு விருபெட்ட சொல்.

**மேலிருந்து கீழாக**

1.அருச்சுணனை இவ்வாறு கூறுவர்
3. இடி ஒத்த கருத்து சொல்
4. மாதங்களில் இவ்வாறு அழைப்பர் (குழம்பியுள்ளது)
6. பூமியை இவ்வாறும் அழைப்பர் (குழம்பியுள்ளது)
7. மார்பின் ஒரு பக்கம்
8. மார்க்கண்'டேயருக்கு இவ்வாறு வாழ சிவபெருமான் வரம் கொடுத்தார் தொழில் ஒத்த கருத்து சொல்
11. இளமையில்க்................சான்றோர் வாக்கு
12. நெல் இற்றும் இடம் (குழம்பியுள்ளது)
14. பிரணவ மந்திரம்
15. பசுவை இவ்வாறும் அழைப்பர்
17. இதுவும் ஒரு பருவ காலம் (குழம்பியுள்ளது)

* விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும் தபால் உறையில் வைத்து அனுப்பப்படும் கூப்பன்கள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.
* முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250/=, 150/=, 100/= பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.
* இப்போட்டியில் ஜெயம் பாலகம், மலைமுரசு ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய உறவினர்களும் பங்குபற்ற முடியாது.

**போட்டி முடிவு திகதி: 10.01.2013**

**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-**
**ஜெயம் குறுக்கெழுத்துப் போட்டி. இல -001**
**32, இராகவரோதயம் வீதி,**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் நிலைமாறுகால நீதியும் படுகொலையும்

அவையில் கூடியிருக்கும் பெரியோர்களே, சகோதர, சகோதரிகளே அனைவருக்கும் இந்நேர வணக்கங்களை உரித்தாக்குவதில் பேருவகை அடைகின்றேன்.

மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் நினைவுப் பேருரையை நிகழ்த்துமாறு எனக்கு அழைப்பு விடுத்த திரு.கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் ஞாபகார்த்தக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கம்பன் எவ்வாறு தனது இயலாமையை இராமாயணத்தின் ஆரம்பத்திலேயே எடுத்தியம்புகிறானோ அவ்வாறு நானும் இப்பேருரையை ஆற்ற அரசியலில் பழுத்த பேராசான்கள் முன் நிற்கின்றேன். அரசியல் அனுபவமோ எனக்கில்லை அறிவும் கூட. இவ்வுரையில் குறையுள்ளதெனில் பொறுத்தருள்க.

மாமனிதர் ஜோசெப் பரராஜசிங்கம் தமிழ்த் தேசியத்தை வாக்கு அரசியலுக்காக விற்று விடாமல் தமிழின விடுதலைக்காக வாழ்ந்து தான் நேசித்த மக்களின் வாழ்தலுக்காக 2005ம் ஆண்டு நத்தார் தினத்தன்று பேராலயத்தில் படுகொலை செய்யப்பட்டார்.

தமிழ் பாராளுமன்றத் தலைமைகள் நடத்தி வருகின்ற விட்டுக் கொடுப்பு அரசியலிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு வாக்கு கேட்பதற்காக மட்டும் தமிழ்த் தேசியத்தை பாவிக்காது ஈழத் தமிழ் மக்களின் விடுவிற்கு தமிழ் தேசியமும் தாயகமுமே ஒரேயொரு தீர்வு என்பதனை மிகத் தெளிவாகவும், காட்டமாகவும் எடுத்துரைத்த குரல்களில் ஒன்றாக விளங்கியவர், பேரினவாத அடிவருடிகளினால் மௌனிக்கப்பட்டார் என்பது மிகக் கவலையான விடயம் மட்டுமல்ல தமிழ்த் தேசிய விடுதலைக்காக நாம் கொடுத்த விலைமதிப்பற்ற விலைகளில் ஜோசப் பரராஜசிங்கமும் ஒருவர்.

தராகி சிவராமால், இரு துருவ அரசியலுக்கு முழுக்குப் போடுவதற்காக கட்டமைக்கப்பட்ட நிறுவனம் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஆனால் மிதவாத அரசியலையும், போராட்ட அரசியலையும் ஒருங்கிணைக்கத் தவறி பின்முள்ளிவாய்க்கால் அரசியல் வெளியில் மீண்டும் சுயநலம் சார்ந்த மிதவாத அரசியலுக்குள் தமிழ்க் கூட்டமைப்பு பயணித்துக் கொண்டிருக்கின்றது என்பது கவலையான விடயம் மாத்திரம் அல்ல தமிழ்த் தேசியத்தையும் அதற்காக ஆகுதியானவர்களையும் அவமதிக்கும் செயலாகவும் இருக்கின்றது.

ஒரு துண்டு கரட்டுக்காக தமிழ் தேசிய வண்டியை ஓட்ட முனையும் அரசியலை அரசியல் சாணக்கியம் என்று நியாயப்படுத்த முடியாது இவ்வாறானதொரு அரசியல் மீள்சுழற்சியில் இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு சிக்கிக் கொண்டுள்ளதாக குருபரன் குறிப்பிடுகின்றார்.

பின் முள்ளிவாய்க்கால் அரசியல் தளத்தில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டுள்ளன. ஆனால் கட்டமைக்கப்பட்ட தமிழினப் படுகொலை மிக வேகமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

பேரினவாத இயங்கு சக்திகளால் இன்னொரு முள்ளிவாய் க்கால் சத்தமின்றி அரங்கேறிக் கொண்டிருகின்றது. இவை தருகின்ற கூட்டுவலி எமது கடந்த காலங்களின் விலைமதிப்பற்ற தியாகங்களை கேள்விக்குட்படுத்தி விடுமோ என்று அஞ்சத் தோன்றுகின்றது. மிக நுட்பமான முறையில் கிளர்ச்சி எதிர்ப்பரசியலை எம்மீது பேரினவாதம் தொடுத்திருக்கின்றது. மே2009 இன் பின்னர் தொடுக்கப்பட்ட கிளர்ச்சி எதிர்ப்பரசியல் தமிழ்த் தேசியம், தாயகம் சார்ந்த கருத்தியலை கட்டுடைக்கின்றது.

இக் கட்டுடைப்பு தமிழர்களின் ஆயுதப் போராட்ட அரசியலின் ஏற்புடைத்தன்மையை சர்வதேசத்திலும் தாயகத்திலும் வலுக்குறைப்புச் செய்கின்றது. இவ்வாறு உருவாக்கப்படும் அரசியல் வெற்றிடத்தை பிற சக்திகள் தத்தமது நிகழ்ச்சித் திட்டங்களிற்கு பயன்படுத்துகின்றனர்.

அன்னிய அரசியல் நிகழ்ச்சித் திட்டங்கள், அது மேற்குலகமாயிருக்கலாம், இல்லாவிடின் அயல் நாட்டுத் திட்டமாக இருக்காலாம். இவை மக்களை தமிழ்த் தேசிய மைய நீரோட்டத்திலிருந்து விளிம்பு நிலைக்கு கடத்திச் செல்வதாக அமைகின்றது.

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் கட்டுடைப்புக்கள் ஏற்படுத்துகின்ற அரசியல் இயங்கு தள வெறுமைகள் விடுதலைப் போராட்டத்தை திட்டமிட்டு மலினப்படுத் துவதாக அமைகின்றது. இவ் மிக நுட்பமான கிளர்ச்சி எதிர்ப்பு உத்திக் கட்டமைப்புக்கள் இன அழிப்பின் நீட்சியாகவே நோக்கப்படவேண்டும்.

இன அழிப்பு ஒடுக்கு முறைகளிலிருந்து ஒரு சமூகம் விடுபட வேண்டுமாயின் எதிர்ப்பரசியலுக்கான அரசியல் வெளி உருவாக்கப்பட்டு, போராட்டம் மக்கள் மயப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது.

மக்கள் அணிதிரள்தல், கீழ் இருந்து மேல் நோக்கி நகருகின்ற, உள்வயப்படுத்துகின்ற போராட்ட உத்தியானது, தமிழ் விடுதலையை அறமயப்படுத்துவதோடு ஏற்புடைமைத் தன்மையும் வழங்குகின்றது.

இன்றைய இவ்வுரை இன அழிவின் பின் ஒரு சமூகம் சர்வதேச சட்ட பொறிமுறைகளைப் பயன்படுத்தி இன அழிவிற்கான நீதியை எவ்வாறு பெற முடியும் அல்லது எவ்வாறான பொறிமுறைகள் சர்வதேச தளத்தில் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது என்பதை ஆராய்கின்றது.

இன அழிப்பின் வடுக்களையும், இழப்புக்களின் அகோரத்தையும் சந்தித்த மக்களிற்கு சர்வதேச தளத்தில் உள்ள நீதி சார்ந்த பொறிமுறைகளை விளக்குவதனூடு, விடுதலைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தக் கூடிய வழிமுறைகளாக இவை அமையக் கூடும் என்பதில் சந்தேகத்திற்கிடமில்லை.

மீண்டும் மேற்குலகத்தால் உருவாக்கப்பட்ட நீதி சார்ந்த பொறிமுறையினூடு, ஈழ விடுதலைப் போராட்டத்தை அணுகுவதில் சிக்கல்கள் உள்ளதை கருத்தில் எடுக்க வேண்டிய தேவையும் உள்ளது.

இறுதியாக நடந்தேறிய மக்கள் தீர்ப்பாயத்தில் அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா தமிழின அழிப்பில் பங்கேற்றதற்கான சான்றுகள் முன் கொணரப்பட்டு சட்ட நிபுணர்களால் அவை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதற்கு மாற்றீடான நீதிப் பொறிமுறைகள் காணப்படாதவிடத்து சர்வதேச தளத்தில் ஏற்கனவே உள்ளவற்றை பயன்படுத்துவதற்கு வலிந்து தள்ளப்படுகின்ற நிலைமையும் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றது.

மே 2009 பின்னான இலங்கை அரசியல் தளத்தில் போலியாக உருவாக்கப்பட்ட நிலைமாறு காலம் ஏற்கனவே விடுதலைப்போர் முடிந்து ஏற்பட்ட நிலைமாறுகால மாற்றங்களோடு ஒப்பிட முடியாதென்பதோடு இலங்கையின் நிலைமாறுகால உதிரியான ஒற்றை மாதிரியாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இலங்கை அரச தரப்பு, தென்னாபிரிக்க உண்மை நல்லிணக்க ஆணைக் குழு மாதிரியை பின்பற்றுவதற்கான முயற்சிகளை முன்னெடுத்துக் கொண்டிருக்கும் நிலையில் அம்மாதிரி இலங்கைக்குப் பொருத்தமா? இல்லையா? என்பது பற்றிய ஆய்வுகளைமுடுக்க வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்திற்குள் தமிழ்ப் புத்திஜீவிகள் சமூகம் தள்ளப்பட்டுள்ளது.

இவ்வுரை பின் நிலைமாறுகால நீதி பற்றிய அறிமுகத்தை வழங்குவதுடன் ஏனைய நாடுகளின் நிலைமாறு கால, பின்நிலைமாறு கால நீதிப் பொறிமுறைகளின் பொருத்தப்பாட்டினையும் ஆராய்கின்றது.

அரசியல் நிலைமாறுகாலத்தை எதிர்நோக்கும் அரசுகளும், அரசாங்கங்களும் சர்வதேச சட்டத்திற்கு அமைவான ஒரு நிலைமாறுகால நீதிப் பொறிமுறையினை பின்பற்ற எதிர்பார்க்கப்படுகின்றார்கள். இப் பொறிமுறை புவியியல், அரசியல், கலாச்சாரம் சார்ந்து மண்மயப்படுத்தப்பட்ட ஒன்றாக விரிவடைகின்றது.

இப் பின்புலத்தில் வெவ்வேறு நிலைமாறுகால, பின்நிலைமாறுகால மாதிரிகள் தோற்றம் பெற்றிருக்கின்றன. அவற்றுள் தென்னாபிரிக்க மாதிரியும் ஒன்று. தென்னாபிரிக்க மாதிரியை விட வேறு மாதிரிகளும் உள என்பதை இங்கு உள்ளவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

இலங்கை அரசு தென்னாபிரிக்க மாதிரியை பின்பற்ற முனைவதற்கான அரசியல் பின்னணி வேறு என்பதையும் இங்கு பகிர விரும்புகின்றேன். போர்க் குற்றவாளிகளை காப்பாற்றும் ஓர் உள் நோக்கில் இலங்கை அரசு மன்னிப்பை மையப்படுத்திய மீள்கட்டமைக்கும் நீதிப் பொறிமுறையை வலிந்து சுமத்த எத்தனிக்கின்றது.

இவ்வுரையில் நான் முன்வைக்க முயலுகின்ற பின் நிலைமாறுகால நீதி அமைப்பு முறை சிலி என்கிற லத்தீன் அமெரிக்க நாட்டில் பின்பற்றப்பட்டது, நான் ஏன் தென்னாபிரிக்க மாதிரிக்கு மாற்றீடாக இதை முன்வைக்க முயலுகின்றேன் என்பதையும் இவ்வுரையில் காணலாம்.

கடந்த தசாப்தம், உலக வரலாற்றில் குறிப்பாக, அரசியல் நிலைமாறு காலத்தை எதிர்நோக்கிய, சர்வாதிகார ஆட்சியிலிருந்து சனநாயக நீரோட்டத்திற்கு வந்த நாடுகளில், நிலைமாறு காலநீதி மிக முக்கிய தேவையாக, தேடலாக, மனித உரிமை மீறல்கள் மலிந்து போன கடந்த தசாப்தத்திலிருந்து நீதி சார்ந்த சுதந்திர, சமத்துவ, சமாதான அரசியல் நீரோட்டத்திற்கு வருவதற்கு ஏற்புடையதாக அமைந்திருந்தது.

ஓர் இனப்படுகொலையை மனித உரிமை மீறல் சார்ந்து விவரிப்பது அதன் செறிவுத்தன்மையை மலினப்படுத்துவதாக இருக்கும் என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றேன்.

இனப்படுகொலை, இன அழிவு சார் சூழலிருந்து பொதுவெளிசார் மைய அரசியலுக்கு வந்த நாடுகளின் நிலைமாறு நீதிப் பொறிமுறைகளையும் இந்நேரத்தில் விமர்சனத்திற்கு அல்லது மீளாய்வுக்கு உட்படுத்தி மீள் வாசித்து எமக்கான, நிலைமாறு கால நீதிப் பொறிமுறையை உருவாக்குவது அவசியமாகின்றது.

நிலைமாறுகால நீதிக் கட்டமைப்புக்கள் பாதிக்கப்பட்ட விளிம்புநிலை சார்ந்தவர்களை மையப்படுத்தியும் விடுதலை, அடிமைத்தள உடைப்பு, சமத்துவம், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை மறுக்கொடுத்தல் சார்ந்தும் அமைய வேண்டும் என்பதை சர்வதேச சட்டம் வலியுறுத்துகின்றது.

இதையே ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகமும் வலியுறுத்துகின்றார். நிலைமாறு நீதியில். என்னென்ன உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்ற சட்டம், அது குறித்த வரையறைக்குள் இருப்பதை தவிர்த்து நாடுகள் தங்களுக்கேற்ற வடிவத்தில் நிலைமாறுகால நீதிக் கட்டமைப்புக்கள் வெவ்வேறு பரிமாணங்களில் உருவாவதை வரவேற்கின்றன.

நிலைமாறுகால நீதிக்கான சர்வதேச நடுவம், தனது கொள்கை விளக்கவுரையில் நிலைமாறுகால நீதிக் கட்டமைப்புள் பின்வரும் கூறுகள் உள்ளக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

முதலாவது குற்றவியல் வழக்கு

மாந்த நேயத்திற்கு எதிராக, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட அமைப்புக்கள், அரசுகள் ஐ.நா. படுகொலை சட்ட வரையறையின்படி ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு செயற்பட்டிருப்பின் அவர்கள் அனைவரும் சர்வதேச போர் குற்ற விதிகளுக்கு அமைவாக தண்டிக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக -இழப்புச் சரிசெய்யும் எதிரீடு இவ் இயக்க முறையினூடாக நிலைமாறுகால அரசியலை முன்னெடுக்கும் அரச தரப்புக்களோ அல்லது அரசாங்கங்களோ, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை சீர் செய்யும் பொது நுட்பத்தை உருவாக்க வேண்டும்.

மூன்றாவதாக நிறுவனக் கட்டமைப்பு மாற்றம் அரச இயந்திர பொறிமுறையினூடு வலிந்து திணிக்கப்பட்ட, நிறுவனமயப்படுத்தப்பட்ட, மனித உரிமை மீறல்கள், கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை பொறிமுறை நுட்பங்கள், அவற்றை இயக்கும் கட்டமைப்புக்கள் தகர்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு இன்னொரு முரண் நிலை உருவாகாத வாறும், தண்டனையிலிருந்து தப்பிக்கும் கலாச்சாரம் ஏற்படாதவாறுக்குமான சூழல் உறுதி செய்யப்பட வேண்டும்.

நான்காவதாக -உண்மை நிலை கண்டறியும் ஆணைக்குழுக்கள்

கடந்த கால மனித உரிமை மீறல் தொடர்பிலும், இனப்படுகொலை, இன அழித்தல் சார்பாகவும் நடந்தேறியவைகளை கண்டடையும் ஆணையங்கள் அமைக்கப்பட்டு மனித உரிமை மீறல்கள், இனப்படுகொலை நடந்ததற்கான மூல காரணங்கள் ஆராயப்பட்டு மீண்டும் நிகழாதிருக்க பரிந்துரைகள் முன்மொழியப்படுதல் அவசியம்.

இவற்றை விட வெவ்வேறு நாடுகள் தத்தம் அரசியல் பின்புலத்திற்கேற்றவாறு இன்னும் ஓரிரு பண்புகளை சேர்த்துள்ளன.

ஆவற்றுள் பொதுவாக இனப்படுகொலை நினைவுத் திறத்தை தக்க வைக்கக் கூடிய செயற்பாடுகளையும் நல்லிணக்க முயற்சிகளையும் குறிப்பிட்டுக் கூற முடியும்.

ஆய்வாளர் Jon Elster நிலைமாறுகால நீதியின் வரலாற்றை மிகச் சுருக்கமாக குறிப்பிடுகின்றார். நிலைமாறுகால நீதியின் பூர்வீகம் சனநாயக அரசியல் கருத்தியலுடன் ஆரம்பிக்கின்றது.

கிரேக்க வரலாற்றில் நிகழ்ந்த இரு சந்தர்ப்பங்களில் ஆட்சி மாற்றம் நிகழ்கின்ற போது தவறிழைத்த ஆட்சியாளர்கள் தண்டிக்கப்பட்டனர்.

**மிகுதி அடுத்த வாரம்**

- நன்றி -
உலகத் தமிழ் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்

பயிற்சி 01 பாடம் - கணிதம்

1. 2041 ஐ விஞ்ஞானக் முறைக்குறிப்பேட்டில் தருக.

2. கூட்டுக 79.23+123=

3. சுருக்குக $1/3 + 2/5 \div 4/9 - 1/8$

4. A= {K,U,M,A,N} எனும் தொடையின் N(A) ஐ காண்க

5. ராஜா ஒரு பொருளை 800 ரூபாவிற்கு வாங்கி 900 ரூபாவிற்கு விற்றால் இலாம் எவ்வளவு?

6. 11CM  18CM இவ்வுருவின் சுற்றளவைக் காண்க.

7. 0.17 எனும் தசம எண்ணை பின்னமாக தருக.

8. X=3, Y=-5 எனின் $XY - x^2 + y^2$ இன் பெறுமானத்தைக் காண்க.

9. 33 இன் 1ம் அண்ணளவாக்கத்தைக் காண்க.

10. எளிய வடிவில் தருக 88:77

11. Sin 30= 1/2 எனின் Cos 60 இன் பெறுமாணம் காண்க

12. ஒரு பெட்டியில் 3 சிவப்பு பந்தும் 2 நீளபந்தும் உள்ளது. ஒரு பந்து எழுமாறாக எடுத்தல் இதற்கான மாதிரியை எழுதுக.

13. சுருக்குக $X^{-3} \times X^5 \times X^0$

14. $\log_3 27^{1/3}$ இன் பெறுமானம் காண்க.

15. காரணிப்படுத்துக $2x^2 - xy$.

16. 5- 3x = -13 எனும் சமன்பாட்டின் ஒ ஐ காண்க

17. $2x^2 = 72$ ஆயின் xஇன் பெறுமானம் காண்க

18. y= 2x-3 எனும் வரையின் வெட்டுத் துண்டை எழுதுக.

19. V = u+at எனும் சமன்பாட்டில் t ஐ எழுவாய் மாற்றம் செய்க.

20. 

உருவில் x இன் பெறுமானம் காண்க.

கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் T.குமணன்

MATHS G.C.E(O/L)
January தொடக்கம் December வரை
பிரதி சனி தோறும் Exam
பிரதி ஞாயிறு தோறும் Paper Class நடைபெறுகின்றது.
சகல மாணவர்களும் பங்குபற்றலாம்
தொடர்பு : T.Kumanam 0772975953

## ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் - 01

1. பாடலை வாசித்து விடை எழுதுக.

வண்ண வண்ண பூச்சியே
வட்டம் இட்டு பூக்களில்
என்ன தேடித் திரிகிறாய்
எடுக்கத் தேனா பார்க்கின்றாய்
மெல்லக் குழாயை வைக்கவும்
மெதுவாய் தேனை உறிஞ்சவும்
செல்ல வண்ணப் பூச்சியே
சொல்லித் தந்ததாரோ சொல்
என்ன என்ன வண்ணங்கள்
இருக்கும் உந்தன் செட்டையில்
எண்ண எண்ண ஆசைதான்
எனக்கு விரல் போதாதே

1) இப்பாடலில் எப்பிராணியைப் பற்றிக் கூறப்படுகிறது? (.............................................)
2) முன்னிலை ஒருமைப் பெயர்ச் சொல்லை எழுதுக? (.............................................)
3) **"மெல்ல"** என்பதன் எதிர்ச்சொல்லை எழுதுக? (.............................................)
4) இப்பாடலை இயற்றியவர் யார்? (.............................................)
5) பாடலிலுள்ள சினைப் பெயரை எழுதுக? (.............................................)
6) ஆசை என்பதன் ஒத்த சொல்லை எழுதுக? (.............................................)
7) தேனை எவ்வாறு உறுஞ்சுகிறது? (.............................................)
8) **"பார்க்கின்றாய்"** என்பது எக்காலத்தைக் குறிக்கிறது? (.............................................)
9) **வண்ணங்கள்** எங்கே உள்ளன? (.............................................)
10) **"எனக்கு விரல் போதாதே"** என்பதனால் கருதப்படுவது யாது? (.............................................)

2. **"முன்நூறு"** என்பதைப்பிரித்தெழுதுக. (.............................................)

3. **"அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்"** என்னும் பழமொழியின் கருத்தை எழுதுக.(.............................................)

4. பின்வரும் வாக்கியத்திற்கு பொருத்தமான குறியீடுகளை இடுக.
   i) தலைவா வருக வருக
   ii) ஐயா அம்மா என்று அழுதாள்

5. ழை, லை, ளை, ள், ல், ழ், ள, ழ, ல எழுத்துக்களை பொருத்தமாக எழுதுக.
ம......... ......... சொ......... பேசும் கு......... ந்தைகளை அ......... த்து பாராட்டுவோம்

6. **"இட்டுக்கட்டுதல்"** என்னும் மரபுத்தொடரின் கருத்து யாது? (.............................................)

7. தரப்பட்ட தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை எழுதுக.
i)அதிபர்:.................. ii)வண்ணத்துப்பூச்சி:...........................

8. தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.
i)Classroom :......................... ii)Milk:.............................................

9. கருத்தை தமிழில் எழுதுக.
   i) Silence please :.............................................
   ii) Happy New year:.............................................

10. "மெஹி என்ன" என்பதன் தமிழ்க்கருத்து யாது?
.............................................

11. "புகையிரத நிலையம்" என்பதன் சிங்களக் கருத்தை தமிழில் எழுதுக.
.............................................

- **12 தொடக்கம் 31 வரையுள்ள வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

12. வீட்டுத்தோட்டத்தில் நிழலுக்காக வளர்க்கப்படும் மரம் எது?
1) வாழை 2) அன்னாசி 3) இஞ்சி 4) கத்தாப்பு

13. நீரில் பூக்கும் தாவரம் எது?
1) கானல்வாழை 2) ஆம்பல் 3) போகன்விலா 4) மே மலர்

14. எதிரிக்கு விஷமயிரை கொட்டித் தாக்கும் பிராணி எது?
1) அட்டை 2) மயிர்க்கொட்டி 3) குளவி 4) மண்புழு

15. கூர்மையான பார்வையால் இரைதேடும் பறவை எது?
1) கழுகு 2) வௌவால் 3) செண்பகம் 4) தீக்கோழி

16. கிராம உத்தியோகத்தர் என்பதைக் குறிக்கும் ஆங்கில எழுத்து
1) GN 2) GS 3) DS 4) AGA

17. 
அருகில் காட்டப்படும் விளையாட்டு எது?
1) சதுரங்கம் 2) கொக்கான்
3) தாயம்போடுதல் 4) சடுகுடு

புலமைப் பரிசில் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் திரு. ந. மனோகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கின்............

இனச்சாபின்மையைப் பாதிக்கும் நியமனமாகவே இந் நியமனம் இருக்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ள அக் கடிதத்தில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரை உள்ளூராட்சித் திணைக்கள ஆணையாளராக நியமனஞ் செய்தால் உள்ளூராட்சித் திணைக்களத்தின் அதியுயர் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரையான உள்ளூராட்சி அதிகாரிகளாக முஸ்லிம் சமூகத்தைச் சோந்தவர்களே இருப்பார்கள் என்று தெளிவாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையானது நியாயமானதொரு சமநிலைப்பட்ட நிர்வாகத்தைப் பேணுவதற்கான வேண்டுகோளாகும். இதற்கும் மேலாக வேறு எதனையும் கருத்திற்கொண்டு எழுதப்படவில்லை என்றும் குறித்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## உலக சாதனை...........

ஆட்டக்காரர் கொரி அண்டர்சன் தெரிவித்துள்ளார். " மிக வேகமாக நான் நூறு ஓட்டங்களைப் பெற்றுள்ளேன் என்பதைப் புரிந்து கொண்டேன் ஆனால் அதிவேகச் சதம் என்பதை நான் அப்போது உணரவில்லை என அவர் தெரிவித்தார்.

எட்டாவது பந்துப் பரிமாற்றத்தின் போது களத்தில் நுழைந்த அண்டர்சன் 18வது பந்துப் பரிமாற்றத்தின் முதலாவது பந்தை நீள்வழத் திசையில் (long on) ஆறு ஓட்டங்களுக்குப் பந்தைச் செலுத்திய போது அவர் 35 பந்துகளில் தனது வரலாற்றுச் சதத்தைப் பூர்த்தி செய்திருந்தார்.

அண்டர்சனின் இவ்வரலாற்றுச் சதத்தால் அவரது ஐ.பி.எல் விலை எகிறிக் குதிக்கும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ள அதே வேளை அவரது வரலாற்றுச் சதத்திற்கு வழிகோலிய அணியான மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைவர் டுவைன் பிராவோ, அண்டர்சனை எப்படியும் சென்னை அணியின் தலைவர் தோனியும், அவ்வணியின் பயிற்சியாளர் பிளம் மிங்கும் ஏலத்தில் வாங்கி விடுவார்கள்.

அதனால் நானும் அவ்வணியில் அண்டர்சனுடன் ஒன்றாக ஆடும் வாய்ப்பைப் பெறுவேன் என எதிர்வு கூறியுள்ளார்.

## சிறுபான்மையினரின்......

பொது மக்களுக்கும் முன்நிலையிலேயே இவ்வாறு ஆலயங்கள் தாக்கியழிக்கப்பட்டுள்ளனஎனத் தெரிவித்துள்ள அச் சங்கம் இவ்வாறு பலருக்கு முன் நிகழ்ந்துள்ள இத் தாக்குதலுக்கான சாட்சிகள் எவையுமில்லை எனக் காவல்துறை கைதுகளை செய்யாதிருப்பது எவ்விதத்திலும் ஞாயமற்றது எனவும் தெரிவித்துள்ளது.

## துயர் பகிர்கின்றோம்

சிவயதமடைய பிரார்த்திக்கின்றோம்



தோற்றம் 30 . 12 . 1936

மறைவு 30 . 12 . 2013

திருமதி அமிர்தநாயகி கதிர்காமத்தம்பி
(பிள்ளையம்மா)

-முரசுக்குழுமம்-

ஊடகவியலாளர் திரு.சசிகுமார் ஆசிரியர் அவர்களின் மாமியார் திருமதி அமிர்தநாயகி கதிர்காமத்தம்பி இயற்கையெய்தினார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு கடந்த செவ்வாய்கிழமை 31.12.2013 மாலை 3.00 மணிக்கு தம்பலகாமம் கள்ளிமேடு இல்லத்தில் நடைபெற்றது.

## உணவு விடுதி...........

தாக்குதலில் அவ் உணவு விடுதியின் உரிமையாளரான நல்லதம்பி ஆனந்தராஜா மற்றும் கடைச்சிப்பந்தியான கணபதிப்பிள்ளை திருச்செலவராஜா ஆகிய இருவரும் காயங்களுக்கு இலக்காகி பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளாகிய இருவரும் மலைமுரசிடயம் நடந்ததை விவரித்தனர். "25ம் திகதி கிரிஸ்மஸ் விடுமுறை நாள் என்பதால் நாங்கள் எங்கள் கடையை சுத்தம் செய்து வைப்பதற்காக கடையினை திறந்து வேலை செய்துக் கொண்டிருந்தோம். அப்போது அருகில் இருக்கும் ரிங்கோ விலேஜ்ல் பணிபுரியும் ஊழியர்கள் இருவர் வந்து (குடிபோதையில்) தங்குவதற்கு அறை தருமாறுக் கேட்டனர். நான் அவர்கள் குடிபோதையில் இருந்தமையால் அறை தர மறுத்தேன் அதற்கு அவர்கள் "பக்கத்தில் இருக்கிற எங்களுக்கு அறை தராம வேற யாருக்கு கொடுப்பாய் ?..... என்னடா கடை நடத்துறாய்..... இருடா வாரன் எனக் கூறிவிட்டு சென்றனர்.

சிறிது நேரத்தில் மேலும் ஐந்து நபர்களை கூட்டிக் கொண்டு கையில் இரும்புக்கம்பி மற்றும் கட்டைகள் சிலவற்றையும் எடுத்துக் கொண்டு வந்த அவர்கள் என்னை தாக்கத் தொடங்கினார்கள். என்னைப் பாதுகாக்க வந்த எனது கடை ஊழியரான திருச்செல்வராஜவையும் சரமாறியாக தாக்கிவிட்டு எனது கடையினையும் தேசப்படுத்தி விட்டுச் சென்றனர். நான் உடனடியாக திருமலை துறைமுக காவல்துறையுனரிடம் சென்று இது பற்றி முறையிட்டேன்.

அவர்களின் அறிவுத்தலின் படி நானும் எனது கடை ஊழியரும் திருமலை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றோம். எனக்கு கையில் பெரிய காயம் ஏற்பட்டதோடு தலையிலும் பலமாக அடிவிழுந்திருந்தது. எனது கடை ஊழியருக்கு கட்டையால் பலமாக தாக்கியதால் உடலில் வெடிப்புகள் ஏற்பட்டு தற்போது அவரும் சிகிச்சை பெற்று வருவதாகவும் இதற்குக் காரணமானவர்களை காவல் துறையினர் கைது செய்து தக்க தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் கூறினர்.

## உண்ணாவிரத...........

மீனவர்களுக்கும் வழங்க வேண்டும் என்றும், இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள கைதிகள் பரிமாற்றத் திட்டப்படி தம்மை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன் வைத்தே அவர்கள் உண்ணாநோன்பு முயற்சியை மேற்கொள்ளவுள்ளனர். அதற்கு முன்னேற்பாடாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகம் மூலம் கடிதமொன்றையும் தமிழக முதல்வருக்கு அவர்கள் அனுப்பியுள்ளனர்.

இலங்கை சிறைச்சாலைகள் ஆணையாளர் ஊடாக அவர்கள் இந்த கடிதத்தை தமிழக முதல மைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளனர். இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில், "இலங்கைச் சிறைச்சாலைகளில் எங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், இவ் வாறானதொரு நிலைமை இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களுக்கு வழங்கப்படுவதில்லை. இதே வேளை, இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான மீனவர் பரிமாற்ற நடவடிக்கையின் பிரகாரம் இரு நாடுகளின் சிறைச்சாலைகளிலுமுள்ள மீனவர்களை அந்தந்த நாடுகளுக்கு அழைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## முல்லை ............

போரின் இறுதிக்கட்டம் நிகழ்ந்தேறிய முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இராணுவத் தளபதியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கின்றது.

## வட்டாரத் தேர்தல்.........

எதிருவரும் மார்ச் மாதம் வட்டாரத் தேர்தல் முறையின் கீழ் கிழக்கின் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலாவது தேர்தல் உள்ளூராட்சி சபைகளுக்காக நடைபெறவுள்ளது எனத் தெரிகின்றது. அதற்கமைய இதற்கமைய மட்டக்களப்பு மாநகர சபை, மண்முனைப்பற்று பிரதேச சபை, மண்முனைப்பற்று தென்மேற்கு, மண்முனைப்பற்று தெற்கு, எருவில்பற்று, மண்முனை மேற்கு, கோரளைப்பற்று வடக்கு, கோரளைப்பற்று, ஏறாவூர்பற்று, போரத்தீவுப்பற்ற ஆகிய ஒன்பது உள்ளூராட்சி மன்றங்களுக்கே தேர்தல் நடத்தப்படவிருக்கின்றது என்ற செய்தி வெளியாகியுள்ளது.

## குழந்தையைக்..........

த்துள்ளது. இக் காணாமற் போதல் தொடர்பாகத் தகவல்களைத் திரட்டிய போது இரு வருடங்களுக்கு முன் இருபது வயதான இளம் தாயொருவரையும் அவரது ஒரு வயது மதிக்கத்தக்க குழந்தையையும் இவ்வில்லம் தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டுள்ளது. அதன் பின்னர் சுமார் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் தாயார் வெளியில் வேலை நிமித்தம் தங்க முயற்சித்ததை அடுத்து அவரை இல்லத்திலிருந்து விலக்கி வைத்துள்ளது நிர்வாகம். ஆனால் குழந்தை இல்லத்தின் பொறுப்பிலேயே இருந்துள்ளது. கடந்த 02.01.2014 அன்று இல்லத்தின் பொறுப்பிலிருந்த குழந்தை காணாமற் போயுள்ளது. இவ்விடயத்தை உப்பு வெளிக் காவல்துறைக்கு இல்ல நிர்வாகம் புகாரிட்டதைத் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அனுர-உதய)

## 4 கோடியில் நவீன....

உள்ளூராட்சி ஆணையாளர் கே.சிவநாதன், பிரதேசச் செயலாளர் எஸ்.வாசுதேவன், கொமர்சியல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் மகேந்திரன், தேசகீர்த்தி லட்சுமிகாந்தன், வைத்தியர் திருக்கணேசன், ஓய்வுநிலைக் காவல்துறை அதிகாரி இராஜலிங்கம் ஆகியோர் அபிவிருத்திக்குழுவின் அங்கத்தவர்களாகத் தெரிவாகியுள்ளனர்.

## மஹிந்த ராஜபக்ஷ......

மாணவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். இவ்வகையான ராஜபக்ச கல்லூரிகள் கிழக்கில் மட்டுமன்றி அனைத்து மாகாணங்களிலும் அமைக்கப்படவிருப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு அமைக்கப்படும் கல்லூரிகளாலும், தேர்வு செய்யப்பட்ட மேலும் 1000 பாடசாலைகளிற்கான வசதிகளை மேம்படுத்துவதாலும் பிரபல்யம் மிக்க பாடசாலைகளில் ஐந்தாம் ஆண்டுப் பரீட்சையின் பின்னர் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்படும் பிரச்சனைகள் தீர்ந்து விடம் என அவர் தெரிவித்தார்.

## கொலையா.........

ஹாசிம் வீதியில் வசித்த 18 வயதுடைய முகம்மது ஹனிபா அஸ்ரின் என்ற இளம் பெண் 2013.07.13 அன்று மரணமாகினார். அன்றைய தினம் பிற்பகல் அவரது ஜனாசா நூரானியாத் தைக்கா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்த மரணம் இயற்கை மரணம் அல்ல கொலை செய்யப்பட்டு அடக்கம் செய்யபட்டதாகவும் தெரிவித்து ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர், பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்குச் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து இவ்விடயத்தை விசாரிக்க கல்முனை காவல் துறையினர், கல்முனை நீதிவான் நீதிமன்ற நீதிபதியின் அனுமதியை பெற்று அவரது முன்னிலையில் 02.01.2013 அன்று காலை 10.00 மணிக்கு இந்த ஜனாசா தோண்டி எடுக்கப்பட்டு, மேலதிகச் சோதனைக்காக கொண்டு செல்லப்பட்டது.

## நான்கு வயதுச்.........

வேலைசெய்யும் சிவியன் எனவும் ஆரம்பத்தில்கடற்படை தெரிவித்திருந்தது. என்றாலும் அங்குள்ள மக்களின் நேர்காணலின்படி கடற்படை சீருடையிலும் கடற்படையணியும் சாதாரண உடையிலுமே அம் மனிதன் கிராமம் பகுதிக்கு வந்து சென்றதாக தெரிகின்றது.குறித்த நநிறுமி நலமாக உள்ளதாகவும் அவர் வீடு திரும்பியிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அச் சிறுமியின் பதினெட்டு வயது வரைக்குமான செலவுகள் அனைத்தையும் இரண்டு நிறுவனங்கள் பொறுப்பேற்றிருப்பதாகவும் மலைமுரசிற்குத் தெரியவந்துள்ளது.

## பாரதிபுரம்- மேன்கமம்...........

செயற்பாடு குறைபாட்டால் வீதிகள் கோயில்கள் துப்பரவு இன்றிகாணப்பட்டமையால் மேன்கமம் அபிராமி விதவைகள் சங்கத்தினால் முருகன் மற்றும் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 27,28ம் திகதிகளில் சிரமதானத்தின் மூலம் துப்பரவு செய்து கொடுத்துள்ளார். இதில் சுமார் 60 விதவைகள் கலந்து கொண்டதுடன் அப்பகுதி பொலிசாரும் கலந்து கொண்ட சிறப்பாகும். அத்துடன்



பாரதிபுரம் கிராமத்தில் உள்ள சங்கங்கள் எதுவும் செயற்படாத காரணத்தினால் அரச அதிகாரிகலும் சரி மக்கள் பிரதிநிதிகலும் கவனிக்காத காரணத்தினால் வீதிகள், காண்கள் மிகவும் மோசமான நிலையில் மண் வீதியாக குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இதைக் கருத்தில் கொண்டு பாரதி விதவைகள் நலன் புரிச்சங்கத்தினர் தங்களது இந்த மாதந்தக்கூட்டத்தில் முடிவு எடுத்து கோயில் மற்றும் பாரதிபுரம் பாடசாலை வீதியை சிரமதானத்தின் மூலம் சுத்தம் செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெண் உரிமை

தொடர்ச்சி..

தனது பெற்றோருக்கு நல்வனாயிருக்கும் படி நாம் மனிதனை ஏவியுள்ளோம். கடுமையான பிரசவ வேதனைக்கு மேல் வேதனையைத் தாங்கிக் கொண்டு அவனது தாய் அவனை பெற்றாள். ஆண்டுகள் கழிய வெவ்வேறானவர்களாக மாற்றி தாய்ப் பாலை மறக்கச் செய்தோம்.

கட்டளையை செவியுறுங்கள் எனக்கும் உங்களின் பெற்றோருக்கும் நன்றியைச் செலுத்துங்கள் எனக்கு நன்றி செலுத்துவதையே உமது இறுதியான குறிக்கோளாகக் கொள்வீராக என்று அல்குர் ஆனில் அல்லா தாயின் மகிமையைக் கூறுகிறான்.

எந்தவொரு நாகரிகமும் கலாசாரமும் சமுதாயமும் என்றுமே செய்திராத வகையில் வழமைக்குப் புறம்பான வழியிலே இஸ்லாம் பெண்களை கௌரவப்படுத்தும் படியும் பாசமுடன் நடத்தும் படியும் நலம் பேணும் படியும் அழைப்பு விடுக்கின்றது என்பது தெளிவாகும்.

இன்னும் இஸ்லாம் பெண்களுக்கு பல உரிமைகளை வழங்குகின்றது. ஆண், பெண் ஆகிய இருபாலாரையும் அறிவைத் தேடும்படி ஆணையிடுகின்றது. எம் பெருமானார் நபிகள் நாதர் அவர்களின் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொன் மொழி கூறுகிறது. ஆண்,பெண் உட்பட எல்லா முஸ்லிம்களின் மீதும் அறிவைத் தேடுதல் கடமையாக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஆண்,பெண் ஆகிய இருவருமே தொழில் புரியும் உரிமை பெற்றுள்ளனர். இஸ்லாம் மார்க்கத்தில் சட்டபூர்வமான எல்லாத் தொழிலும் ஆண்களைப் போல பெண்களுக்கும் உரிமையுண்டு. எனினும் திருமணஞ் செய்த பெண்ணொருத்தி தனது கணவனின் சம்மதமின்றி தொழில் புரிய அனுமதிக்கப்படவில்லை.

ஏனென்றால் இஸ்லாத்தில் திருமண சம்பந்தமான உரிமைகளும் குடும்பத்தின் தேவைகளுமே முதலிடம் வகிக்கின்றது. குடும்ப வாழ்க்கையைப் பாதுகாத்தலும் குடும்பக்கடமைகள் மீது கவனம் செலுத்தலும் இஸ்லாத்தில் மனைவி மீது கட்டாய மாக்கப் பட்டுள்ளது.

ஆணைப்போன்றே பெண்ணும் சட்டபூர்வமான முழு உரிமைகளையும் அனுப்விக்கிறாள். அவள் சொத்துகளுக்கு வாரிசாகலாம், வாங்கலாம், விற்கலாம், கொடுக்கலாம், எடுக்கலாம், ஒப்பந்தங்களை முடிக்கலாம்.

பெண் ஒரு சட்டபூர்வமான சுயாதீனமுள்ள ஆளுமையைக் கொண்டுள்ளார். அவளது தந்தை கணவன் அல்லது சகோதரர் ஆகியோரின் கடமைகளிலிருந்தும் அவளது கடமைகள் சுதந்திர முடையவையாக விளங்குகின்றன. இவ்வாறு இஸ்லாத்திலே பெண் எல்லா உரிமைகளையும் அனுபவிப்பதுடன் இவ்விடத்தில் ஆணுக்குச் சமமாக நடத்தப்படுகிறாள்.

ஆகவே இஸ்லாம் தந்த உரிமைகளை சிறந்த முறையில் பயன் படுத்தி சிறந்த இஸ்லாமிய பெண் சமுதாயத்தை ஒவ்வொரு பெண்களும் உருவாக்க வேண்டும்.

**எனக் கேட்டுக் கொள்கிறேன்.**

(முற்றும்)

# "உறவினர்களுடன் சேர்ந்து வாழ்தல்" நபி அவர்கள் கூறியதில் இருந்து

அல்லாஹ்த்தாஆலாவின் பொருத்தம் தந்தையின் பொருத்தத்திலும் அல்லாஹ்த்தாஆலாவின் வெறுப்பு தந்தையின் வெறுப்பிலும் உள்ளது எனவும் நன்மைகளில் சிறந்த நன்மை தந்தையின் மரணத்திற்குப் பின் தந்தையுடன் நட்புக்கொண்டவர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்வதோடு தந்தையின் சகோதரர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவும் என நபி அவர்கள் கூறியுள்ளார்கள்.

யார் தனது ஆயுள் அதிகமாக்கப்பட வேண்டும், தனக்குத் தேவையானவைகள் அதிகமாகக்கிடைக்க வேண்டும் என விரும்புகிறாறோ அவர் தனது பெற்றோருடன் அழகிய முறையில் நடந்து தன் சொந்த பந்தங்களின் உறவு முறையை பாதுகாத்துக் கொள்வதோடு எவர் தன் பெற்றோருடன் நல்ல முறையில் நடந்தாரோ அவரது ஆயுளை அல்லாஹ்த்தாஆலா அதிகரிப்பான்.

என்ற நற்செய்தி அவருக்கு உண்டு என நபிகள் நாயகம் அவர்கள் கூறி இருக்கிறார்கள். ஒருவர் நபி அவர்களின் சமூகத்திற்கு வந்து நான் அழகிய முறையில் நடந்து கொள்ள அதிக தகுதியுடையவர் யார், என வினா வியதற்கு "உமது தாய்" பிறகு யார் என அவர்கேட்க "உமது தாய்" பிறகு யார்? எனக் கேட்க "உமது தாய்" பிறகு யார் எனக் கேட்க உமது தந்தை என நபி அவர்கள் பதிலளித்தார்கள்.

நற்காரியங்கள் செய்வது தீய மரணத்தைத் தடுக்கிறது. **(தொடரும்)**

**ஜாபிர் பஸ்னா**
**நொக்ஸ் வீதி**

# இத்தா எதற்கு

தொடர்ச்சி..

அதாவது அல்லாஹ்வின் ஏவல் விலக்கல் மட்டுமே இதற்கப்பால் எமக்கு என்று எமது சிற்றளிவுக்கு எட்டியதென்று எம்மால் எதையும் மாற்றக் கூடிய சக்தியையோ உரிமையையோ அல்லாஸ் சத்தலோ தரவில்லை. இதைத்தான் அவன் தன் திருமறையுல்.

"அல்லாஹ்வும் அவனது தூதரும்" யாதொரு விஷயத்தைப் பற்றிக் கட்டளையிட்டபின்னர்.அவ்விஷயத்தில் அபிப்பிராயம் கொள்வதற்கு, விசுவாசியான எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிமையில்லை என்று குறிப்பிட்டுள்ளான்.

எனின் இத்தா விஷயமும் அவ்வாறே அல்லா பணித்த விடயம் இருக்கலாமா? இருக்க வேண்டுமா என்ற பேச்சுக்கே இடமில்லை அல்லாஹ் கூறுகிறான்.

"உங்கள் எவரேனும் மனைவிகளை விட்டு விட்டு இறந்தால், அவர்கள் நான்கு மாதம் பத்து நாட்கள் எதிர்பார்த்திருக்கவும்

இது கணவனை இழந்த விதவை இருக்க வேண்டிய இத்த "தலாக் கூறப்பட்ட பெண்கள் தங்களுக்கு மூன்று மாத விடாய்கள் வரும் காலம் வரை எதிர்பார்க்கவும்

இது தலாக் செய்யப்பட்ட பெண்ணினது இத்தா அல்லாஹுத்த ஆலா நேரடியாக திருமறையில் இத்தா பற்றி ஏவி வைத்திருக்கிறான். இத்தா விடயத்தை விவரமாக "தலாக்" எனும் அத்தியாயமாகவே கூறி வைத்திக் கிறான். எம் மக்கிடையே குர்ஆன் தர்ஜீமாவை வாசிக்கும் பழக்கம் இருக்குமானால் இன்று இத்தா பற்றி சர்ச்சைகள் ஏற்பட்டிரா.**(தொடரும்)**

# அழகுக் குறிப்புக்கள்




## முகம் பளபளப்பாக இருக்க



**தேவையான பொருள்கள்:**
கரட் சாறு,ஆரஞ்சு பழச்சாறு,எலுமிச்சை பழச்சாறு, பன்னீர்,தயிர்.

**செய்முறை:**
சம அளவு கரட் சாறு, ஆரஞ்சு பழச்சாறு, எலுமிச்சை பழச்சாறு மற்றும் பன்னீர் ஆகியவற்றை எடுத்து அதனுடன் தயிர் சேர்த்து நன்றாக கலந்து முகம் மற்றும் கழுத்தில் பூசி சிறிது நேரம் ஊற வைத்து பிறகு கழுவி வந்தால் முகம் பளபளப்பாகும்.

## முகம் மென்மையாக மாற



**தேவையான பொருட்கள்:**
பாசிப்பருப்பு, தேங்காய் பால், மஞ்சள் பொடி.

**செய்முறை:**
சிறிதளவு பாசிப் பருப்பை எடுத்து தேங்காய் பாலில் ஊறவைத்து மைபோல அரைத்து அதனுடன் மஞ்சள் பொடியை சேர்த்து முகத்தில் பூசி உலர்ந்த பின்னர் முகத்தை கழுவி வந்தால் முகம் மென்மையாக காணப்படும்.

## முகத்தில் கரும்புள்ளிகள் குறைய



**தேவையான பொருட்கள்:**
கொத்தமல்லி.,மஞ்சள்.

**செய்முறை:**
கொத்தமல்லி, மஞ்சள் ஆகியவற்றை சேர்த்து அரைத்து பேஸ்ட் செய்து முகத்தில் தடவி காயவைத்து பின்பு தண்ணீரில் கழுவி வந்தால் முகத்தில் ஏற்படும் கரும்புள்ளிகள் குறையும்.

## முகப்பரு குறைய

**தேவையான பொருள்கள்:**
வசம்பு,திருநீற்றுப்பச்சிலை.

**செய்முறை:**
ஒரு துண்டு வசம்பு எடுத்து திருநீற்றுப்பச்சிலை சாறு விட்டு நன்றாக அரைத்து தடவி வந்தால் முகப்பரு குறையும். சருமம் பளபளப்பாகும்.

# வெற்றிப் பெண்கள்

தொடர்ச்சி..

**வெற்றி** பெறுவது மட்டுமல்லாமல் கிடைத்த வெற்றியை தக்க வைத்துக் கொள்ள முயற்சிகளும் செய்ய வேண்டும்.

இது வெற்றிகரமான பெண்கள் எதிர்கொள்ளும் கடினமான காரியங்களில் ஒன்றாகும். பெரும் அர்ப்பணிப்பு பெண்கள் வெற்றியுடன் வாழ்வதற்கு எடுக்கும் முயற்சியும் அதற்காக படும் பாடுகளையும் வார்த்தைகளில் சொல்ல முடியாது.

அர்பணிப்பே அவள் வெற்றியின் காரணமாகும். எல்லா பெண்களும் அவர்களின் குடும்பத்தை மிகவும் நேசிப்பதுண்டு. சில சமயங்களில் வெற்றி பெறும் பொருட்டு அவளின் குடும்பத்தையே தியாகம் செய்யும் அளவிற்கு முனைந்திருப்பாள்.

இது வெற்றி பெறும் பெண்களுக்கு ஒரு பெரும் இழப்பாக மாறிவிடுகின்றது. அவளது வாழ்கையையே இத்தகைய கனவுகள் மூலம் சில நேரங்களில் அழித்து விடுகிறாள்.

ஓ! நான் களைத்து விட்டேன்... உடலும் உள்ளமும் அயர்ந்து போய் விட்டது. இந்த நிலைமை எல்லா மனிதருக்கும் கண்டிப்பாக ஒரு நாள் வரும்.

விரக்தி, களைப்பு ஆகியவை எந்த ஒரு வெற்றி பெற்ற பெண்ணுக்கு வந்தாலும் அதை உதறி விட்டு அவள் பெற்ற வெற்றியை தக்க வைத்துக் கொள்ள பாடுபடுவாள்.

இதுவும் மிகப்பெரிய கடினமான காரியமாகும். இதை எல்லாம் மறந்து விட்டு உழைக்க வேண்டும் என்பது கடினம் தான்.

அவளுக்கென தனிப்பட்ட மன அழுத்தம், வேலைப்பளு ஆகியவை இருக்கத்தான் செய்கின்றது. ஆனாலும் அவளுக்கு ஒய்வு வேண்டும் என்பதில்லை.

**வெற்றிப் படிகள் தொடரும்....**

# வாழ்க்கைப்பாதையில் பெண்களைப் பற்றி

வாழ்க்கை என்பது பள்ளம் மேடைக் கொண்டதொன்றாகும். வாழ்வில் இன்பமும், துன்பமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை.

இன்பத்தில் மகிழ்ந்து, துன்பத்தில் துவண்டு போகாது, எல்லாவற்றையும் சமமாக எடுத்துக் கொண்டு வாழப் பழகினால் இன்று பெண்களாகிய எம் மத்தியில் எழுகின்ற பல பிரச்சினைகளை எதிர்த்து சவால் கொள்ளக்கூடிய துணிச்சல் தாமாகவே எம்மிடம் வந்து விடும் என்பது முற்றிலும் உண்மை.

ஒவ்வொரு பெண்ணும் பிறப்பிலிருந்து இறப்புவரை ஒருவருக்குக் கட்டுப்பட்டே வாழ வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றாள்.

இன்றைய சமுதாயத்தால்! இதனால் தன் பரிபூரண சுதந்திரத்தை அவள் இழந்து, கட்டுப்பட்டு வாழ்பவரின் சொல்லுக்கேற்ப நடக்கவேண்டிய சூழ்நிலை. இதனால் அவள் மனதால் தாழ்த்தப் படுகின்றாள்.

அவளுக்குள் தாழ்வு மனப்பான்மை, தாழ்வுச் சிக்கல் ஏற்படுகின்றது.

இன்று சில பெண்கள் பல விடயங்களில் முன்னிலை வகித்தாலும்.....

(தொடரும்)

**[ஜெய்]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## „இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலையே.....‟

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை அதற்கு பொது மன்னிப்பு வழங்க முடியாது. அதற்கு பக்கச் சார்பற்ற சர்வதேச விசாரணை ஒன்று நடைபெற வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், இலங்கையில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற இன அழிப்பு நடவடிக்கைக்கு சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணை அவசியம். யுத்தம் முடிந்து நான்கு வருடங்கள் கடந்துள்ள போதும் இதுவரை அரசியல் தீர்வு எட்டப்படவில்லை.

ஆயுத ரீதியான போராட்டமே முடிவுக்கு வந்துள்ளது. இந் நிலையில் உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு இங்கு ஏற்றுக்கொள்ள முடியாது.

யுத்தம் முடிந்த பின்னர் ஒரு தீர்வு எட்டப்படும் போதே உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு சாத்தியப்பாடானது. ஆனால் இந்த நியதிக்கு மாறாக இலங்கையில் இதனை நடைமுறைப் படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அண்மையில் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டுக்கு வருகை தந்திருந்த தென்னாபிரிக்காவின் ஜனாதிபதியிடம் அங்கு இந்தப் பொறிமுறையை அமுல்படுத்தி எவ்வாறு பிரச்சனைக்கு தீர்வு எட்டப்பட்டது என்பது தொடர்பிலும் அதனை இங்கு அமுல்படுத்துவதன் மூலம் இங்குள்ள பிரச்சனைக்கு தீர்வு எட்டப்படுவது குறித்தும் இலங்கை அரசாங்கம் கருத்து தெரிவித்து இருந்தது.

இலங்கையை பொறுத்தவரைக்கும் திட்டமிட்ட தமிழ் மக்களின் மீதான இனவழிப்பை நிறுத்துவதன் ஊடாகவே தீர்வை எட்டலாம் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

## "அலசுகிறார் அப்புக்காத்து"



அரசாங்கம் எதைச் செய்தாலும் அதை எதிர்ப்பதே கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரல் - அமைச்சர் கெஹலிய

" அண்ண.... அரசாங்கம் எதைச் செய்யுது எண்டு முதல் சொல்லுங்கோவன்"

"இங்குள்ள சில தமிழர்களோ, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக "வார்த்தை தர்மம்" வழங்குவதையே மிகப் பெரிய தியாகம் என்றெண்ணிச் செய்து கொண்டிருக்கிறார்கள்." - கருணாநிதி

" ஜயாவைப் போல ஆருமே ஈழத் தமிழருக்காக அஞ்சு மணித்தியால உண்ணாவிரதம் இருக்கேல்லை எண்டு கவலைப்படுது மனுசன்... "

## காவல்துறை தொடர்பில் முறையிட புதிய தொலைபேசி இலக்கம்.

காவலதுறை தொடர்பாக பொது மக்கள் முறையிட வேண்டுமாயின் அத்தகைய முறைப்பாடுகளைச் செய்வதற்கு 0710361010 என்ற எண்ணின் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என தேசிய காவல்துறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

காவல்துறை அலுவலர்கள் மற்றும் அதிகாரிகள் பொதுமக்களுக்கு இழைக்கும் அநீதி தொடர்பாக 24 மணிநேரமும் இத் தொலைபேசி இலக்கங்கள் ஊடாகத் தகவல்களைத் தெரிவிக்க முடியும்.



07 10 36 10 10





கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடு மற்றும் கிழக்கு மாகாண சமமான பிராந்திய அபிவிருத்தி திட்டத்தின் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் மூலம் மூதூர் வேதத்தீவு மீள் குடியேற்ற கிராமத்தில் 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் 29.12.2013 ஞாயிற்றுக் கிழமை மக்களிடம் கையளிக் கப்பட்டன.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் ஏ. மஜீத் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை, மூதூர் பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.ஹரீஸ், இணைப்புச் செயலாளர் டாக்டர் எம். சியா மூதூர் பிரதேச செயலாளர் என். பிரதீபன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது அமைச்சினால் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளி களுக்கு கையளிக்கப்பட்டது. அத்தோடு வேதத்தீவுக்கான பேரூந்து சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் பாலர் பாடசாலையொன்றும் அங்குரார் ப்பணம் செய்யப்பட்டது. ஷாபி நகர்- வேதத்தீவு ஆற்றைக் கடப்பதற்கு இயந்திரப் படகுப்பாதை சேவை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (தடயம் நெட்)

## விசேட திறமையுடையோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளை கௌரவிக்கும் நிகழ்வு



திருகோணமலை, அலஸ் தோட்டம் மாதுமை அம்பாள் வித்தியாலயத்தில் சர்வதேச விசேட திறமையுடையோர் மற்றும் சிரேஷ்ட பிரஜைகளை கௌரவிக்கும் நிகழ்வு செவ்வாய்க் கிழமை (2013.12.31) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு மற்றும் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் ஆகியன இணைந்து இந்நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் உதுமா லெப்பை, சுகாதார அமைச்சர் மன்சூர், மாகாணசபை தவிசாளர் ஆரியவதி கலபதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது தலைமை யுரையினை கிழக்கு மாகண சுகாதாரம் மற்றும் சமூக சேவை கள் அமைச்சின் செயலாளர் கலாநிதி எஸ்.அமலநாதன் நாட்டில் உள்ள மொத்த சனத்தொகையில் மூன்று வீத மான இயலளவு குறைந்த வர்கள் கிழக்கு மாகாணத்திலே யே உள்ளனர் அதற்கு கடந்த யுத்தமும் ஓர் காரணமாகிறது.

இவ்வாறானவர்களின் இயலளவை கூட்டுவதற்கு கிழக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களத் தினால் பல்வேறு பணிகள் முன்னெடுக் கப்பட்ட வருகின்றன. இவற்றில் பல்வேறு பயிற்சி வகுப்புக்கள் மற்றும் உதவித்திட்டங்கள் குறிப்பிடத்தக்கது என்றார்.

(பஹ்மி யூஸுப்)



## உலக யுத்த அநாதைகள் தின நிகழ்வு

மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத்தின் ஏற்பாட்டில் மூதூர் தெற்கு பிரதேசத்தில் வசிக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் நலன் கருதிய நிகழ்வு ஒன்று பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டட மண்டபத்தில் 2014.01.06 திங்கட்கிழமை அன்று மு.ப10.00மணிக்கு நடைபெறவுள்ளது.

என்றும் சமய, சமூகப்பணியில்
மூதூர் பிரதேச
இந்து குருமார் சங்கம்
தொ.பே.இல:- 0773714020

## 'முகாம்' நாடகத்தின் முதலாவது மேடை யேற்றம்



2014ம் ஆண்டு தேசிய நாடக விழாவிற்கான "முகாம்" என்னும் நாடகத்தின் முதலாவது மேடையேற்றம் 30.12.2013 திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் உவர்மலை விவேகானந்தா கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கலாச்சார பணிப்பாளர் உபனந்த பொலிக்கலயின் தயாரிப்பில் மு.காளிதாஸ் அவர்களின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட இந்நாடகம் தேசி நாடக விழாக்குழுவின் தேர்வாளர்களின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

(ஜெய்)

## இந்து சமய மக்கள் அனைவரும் விசேட தினங்கள், பண்டிகைகள், விரதங்கள்



இடம்பெறுகின்ற போது அதி காலையில் எழுந்து ஆலயம் சென்று இறைவழிப் பாட்டில் ஈடுபடுவது வழ க்கம் அவ்வகை யில் பிறந்திருக்கின்ற புது வருடத்தில் ஆலயங்கள் சென்று இறை வழிபாட்டில் ஈடுபட்டதை காண முடிந்தது.

குறிப்பாக சுயமாக தோன்றிய சுயம்பு லிங்கம் வீற்றிருந்து அருள் புரியும் கொக்கட்டிச்சோலை திருத் தாந்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இடம் பெற்ற பூசை ஆராதனைகளை இங்கு காணலாம். அத்துடன் படுவான்கரைப்



பிரதேசத்தில் உள்ள எல்லா ஆலயங்களிலும் சிறப்பாக பூசை ஆரதனைகள் இடம் பெற்றுள்ளன. இதன் போது ஆலய பக்தர்களுக்கு ஆலய நிருவாகி களாலும், ஆலய குருமார்களாலும் புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சிறுபான்மையினரின் ஆலயஅழிப்புத் தொடர்பில் காவல்துறை நடவடிக்கைகள் எடுப்பதில்லை”

## -சனநாயகத்திற்கான சட்டவாளர் சங்கம்-



சிறுபான்மையின மக்களின் ஆலயங்கள் அழிக்கப்படுவது தொடர்பாக காவல்துறை நடவடிக்கைகளை எடுப்பதில்லை என சனநாயகத்திற்கான சட்டவாளர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

விசேடமாக வடக்கு மற்றும் கிழக்கில் அழிக்கப்பட்டு வரும் சிறுபான்மையினத்தின் ஆலயங்களை அழிப்பவர்கள் கைது செய்யப்படவோ அல்லது சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை எனத் தெரிவித்துள்ள சட்டவாளர் சங்கம், ஆலய அழிப்பில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து சட்டப்படி அவர்களுக்குத் தண்டனை வழங்கக் காவல்துறை மா அதிபர் உடனடி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளது. காவல்துறையினருக்கும்...... 13

## கொலையா... இயற்கை மரணமா?



கல்முனையில் இறந்து புதைக்கப்பட்ட இளைஞி கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுப்பப்பட்டதைத் தொடர்ந்து அவரது ஜனாசா தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. கல்முனை குடி..... 13

## 04 கோடியில் நவீன சந்தைத் தொகுதி

மட்டக்களப்பு பொதுச் சந்தைப் பகுதியில் 04 கோடி ரூபாவில் நவீன சந்தைத் தொகுதியொன்றை நிர்மாணிக்கும் அடிக்கல்லை அண்மையில் சனாதிபதி ஆலோசகரான சிவனேசதுரை சந்திரகாந்தன் நாட்டியுள்ளார்.

கிழக்கின் உதயம் வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதியைக் கொண்டே இந் நவீன கட்டடத் தொகுதி அமைக்கப்படவுள்ளது.

## மட்டு போதனா வைத்தியசாலைக்கு புதிய அபிவிருத்திக் குழு

கிழக்கு மாகாணத்திலுள்ள ஒரேயொரு போதனா வைத்தியசாலையான மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் 2014ம் ஆண்டுக்கான அபிவிருத்திக் குழு நியமனம் பெற்றுள்ளது.

மட்டு வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுத் தலைவராக மாவட்டச் சுதந்திரக் கட்சி அமைப்பாளர் இராஜன் மயில்வாகனம் செயற்பட்டுவரும் வேளையில் கலாநிதி.கே. பிறேம்குமார்....... 13

## நான்கு வயதுச் சிறுமி மீது பாலியல் வன்புணர்வு

திருகோணமலை, திரியாய் பிரதேசத்தில் தாயுடன் தனித்திருந்த சிறுமி மீது பாலியல் வன்புணர்வு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நான்கு வயதான இச்சிறுமியை வன்புணர முயற்சித்த போது தடுத்த தாயும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார். திரியாய் பிரதேச கடற்படைச் சிப்பாயே இந் நடவடிக்கையை மேற்கொண்டதாக காவல்துறையில் முறைப்பாடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அச் சிப்பாய் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் நிறுத்தப்பட்டுள்ளான்.

எனினும் அவன் கடற்படைச் சிப்பாய் அல்ல என்றும் கடற்படை முகாமில் சமையல்...... 13

## உண்ணாவிரத முனைப்பில் இந்திய மீனவர்கள்

திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்கள் நூற்று நாற்பத்தியிரண்டு பேரும் உண்ணா நோன்பிருக்கத் திட்டமிடுவதாக தெரிகின்றது.

தமக்கு இலங்கைச் சிறையில் வழங்கப்படும் வசதிகளைப் போல இந்தியாவிலுள்ள இலங்கை... 13

## “சர்வதேசச் சூழல் சாதகமாக மாறிவருகின்றது”



தமிழ் மக்களை இரண்டாம் பிரஜையாக மாற்றி ஒடுக்க நினைக்கும் இந்த அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக கனிந்துவரும் சர்வதேச சூழலை சாதகமாக மாற்றிக்கொள்ள வேறுபாடுகளை களைந்து ஒன்றுபடவேண்டிய முக்கிய காலகட்டம் ஏற்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணசபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம்(ஜனா) தெரிவித்தார்.

வெல்லாவெளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட தும்பங்கேணி கொச்சிபாம் பகுதியில் நடைபெற்ற பரிசளிப்பு விழா மற்றும் வைத்திய முகாம் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“கடந்தகால யுத்தத்தின் கொடுமைகளை அனுபவித்த இந்த கிராமத்தின் தேவையை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அந்தவகையில் எங்களால் முடிந்தளவான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுவருகின்றோம். இன்று நாங்கள் பின்தங்கிய நிலையில் உள்ளபோதிலும் எமது பிள்ளைகளை கற்பிக்கவேண்டிய தேவையிருக்கின்றது. நாங்கள் கற்கும் போதே எம்மை சூழவுள்ள தடைகளை உடைத்து வெளியேறமுடியும்.” என அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (மட்டு நியூஸ்)

## நெல்சன் மண்டேலாவின் நினைவு தினம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது

திருகோணமலையில் நடைபெறவிருந்த நெல்சன் மண்டேலாவின் நினைவு தினம் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நினைவு தினம் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கொள்ளைச் சந்தேகநபர் கைது

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூரிலுள்ள கையடக்கத் தொலைபேசி கடையொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவரை நேற்று புதன்கிழமை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தோப்பூர் பிரதான வீதியிலுள்ள மேற்படி கையடக்கத் தொலைபேசிக் கடை உடைக்கப்பட்டு, கடையிலிருந்து 100,000 ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசிகள் கடந்த 02 வாரங்களுக்கு முன்னர் திருட்டுப் போயுள்ளன. காணாமல் போன கையடக்கத் தொலைபேசிகளின் இரகசிய குறியீட்டு இலக்கங்களை கொண்டு கடந்த புதன்கிழமை மற்றுமொரு கையடக்கத் தொலைபேசிக் கடையொன்றுக்கு கையடக்கத் தொலைபேசி ஒன்றை விற்பனை செய்வதற்கு வந்த இளைஞரிடம் இருந்த தொலைபேசி திருட்டுப் போனது எனக் கண்டறியப்பட்டதை அடுத்து அந்த இளைஞன் கைதாகியுள்ளார். தோப்பூர் காவல்துறை விசாரணைகளை முன்னெடுத்துள்ளது

## அரச நியமனங்களால் இழுபறி

சனாதிபதியினால் வழங்கப்பட்ட மத்திய அரசின் முகாமைத்துவ உதவியாளர் நியமனங்களால் கடும் இழுபறி நிலையை நியமனதாரர்கள் அடைந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

கடந்த 02ம் திகதி மத்திய அரசின் நியமனங்களை சனாதிபதியின் கையால் பெற்றுக்கொண்ட அனைத்து இன முகாமைத்துவ உதவியாளர்களுக்கும் அதிர்ச்சி தரத் தக்க வகையில், தெற்கைச் சேர்ந்தவர்களுக்கு வடக்குக் கிழக்கிலும், வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவர்களுக்கு தெற்கிலும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## கலாபூஷணம் விருது



வல்வெட்டித்துறை பொலிகண்டியை பிறப்பிடமாகவும் திருகோணமலை கணேசன் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா செல்லமுத்து தம்பதியரின் மூத்த புதல்வனான சீ.என். துரைராஜா அவர்கள்

15.12.213ல் கலாபூஷணம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட இவர் 2013 சாகித்திய விருது, அருட்கவி, சமாதான நீதவான், கவிஞர் பட்டங்களை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் திருமலை கலை மாறன், [illegible]வன், குணகௌரி எனும் பெயர்களில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் என்பவற்றில் தேர்ச்சி பெற்றவர்.

## நீதி தாமதமாகும் கடற்கரையில் கொல்லப்பட்ட மாணவர்களின் எட்டாம் ஆண்டு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org